Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்; 08 விலை ரூபா: 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 17 (02 - 08 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 165

## நாளை முதல் இலவச உலர்உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான ஆவணி மாதத்திற்குரிய இலவச உலர்உணவு நாளை 3ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது. இவை இரண்டு வாரங்களுக்கு வழங்கப்படும். இவ் உலர் உணவு விநியோகத்தில் 9 ஆம் திகதிக்கு முன் 1 ஆம் வார நிவாரணத்தையும் 15 ஆம் திகதிக்கு முன் 2 ஆம் வார நிவாரணத்தையும் வழங்குமாறு சகல 8ஆம் பக்கம் பார்க்க)

# முகாம் நுழைய இராணுவம் முயற்சி;

# புலிகள் தொடர்ந்தும் தாக்குதல்

## விமானங்கள் அகோர குண்டு வீச்சு

(இயக்கச்சி)

முற்றுகைக்குள்ளாகியிருக்கும் ஆனையிறவு முகாம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் தொடர்ந்து மோதல் நிகழ்ந்துகொணடிருப்பதாகவும், இராணுவம் முகாமிற்குள நுழைவதற்கு முயற்சி எடுத்துவருவதாகவும் அங்கிருந்து வரும செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை ஆனையிறவு முகாம் பகுதியில் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் பலத்த குண்டுத்தாக்குதலை நடத்தி வருகின்றன. ஆறு குண்டுவீச்சு விமானங்களும் இரண்டு அவ்ரோ விமானங்களும், இரண்டுஹெலிகொப்டர்களும் தொடர்ச்சியாக நேற்று முழுவதும் தாக்குதலை மேற்கொண்ட வண்ணமிருந்தன.

நேற்று நடந்த மோதலில் இராணுவத் தரப்பில் பலர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தும் உள்ளனர். புலிகள் தரப்பில் கணேஷ் உட்பட சிலர் வீரமரணமடைந்தனர்

## கேணல் ஹெற்றியாராச்சி படுகாயம்

(கொழும்பு)

துரித நடவடிக்கைப் படைப் பிரிவு மேலதிகாரி கேணல் காமினி ஹெற்றியாராச்சி மணலாறு மோதலில் படுகாயமுற்று கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## போர்முனைக்கு அனுப்பப்பட்ட தனியாரிடம் பெறப்பட்ட உழவு இயந்திரங்கள்

(கொழும்பு)

ஆனையிறவு முகாம் மீதான முற்றுகையை முறியடிக்க சிறிலங்கா இராணுவத்துக்கு அனுப்பப்பட்ட 300 உழவு இயந்திரங்களும் அரசாங்கத் திணைக்களங்கள், மற்றும் தனியாரிடம் இருந்து பெறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த உழவு இயந்திரங்கள் திருக்கோணமலை மாவட்டத்தின் புல்மோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்தே கப்பலில் ஏற்றப்பட்டன என்றும் ஆனையிறவுக்கு அப்பால் உள்ள கட்டைக் காட்டுப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினரின் கன

(8ஆம் பக்கம் பார்க்க)

## துணைப்படை வீரர் கண்ணன் வீர மரணம்

(நமது நிருபர்)

ஆனையிறவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சில் விடுதலைப் புலிகளின் துணைப் படையைச்சேர்ந்த வீரர் திரு. கண்ணன் (நல்லையா பகீரதன் ளை) வீர மரணத்தைத் தழுவிக்கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஆவணம் இல்லாதோர் நாடு கடத்தப்படுவர்

(டில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் இந்தியாவிலிருந்து நாடுகடத்தப்படுவார்கள் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

நேற்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்துப்பேசிய சவான் குடியேற்றத்திற்கான தகுந்த ஆவணங்கள் இல்லாது அகதிமுகாம்களுக்கு வெளியே தங்கி இருக்கும் இலங்கைத் தமிழர்களை கண்டு பிடிப்பதற்காக தமிழக அரசு வீடு வீடாகச் சோதனை நடத்தி வருகின்றது என்றும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் செய்தாலே பேச்சில் கலப்போம்

### — விக்கிரமபாகு கருணாரத்னா

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் காலவரையறையற்ற யுத்த நிறுத்தம் ஒன்றை நிபந்தனையேதுமின்றி பிரகடனம் செய்தால் மாத்திரமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான உத்தேச பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் நவசமசமாஜக் கட்சி அங்கம் வகிக்க முன்வரும் என இக்கட்சியின் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்னா தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக கலந்துரையாட முடியாது எனவும், காலவரை

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரருக்கு மக்கள் அஞ்சலி

(நமது நிருபர்)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்துடன் நேற்றுமுன் தினம் நடைபெற்ற நேரடி மோதலில் வீரவேங்கை அன்பு (யாக்கோவ் அல்பின் போர்ட், உயரப்புலம், ஆனைக்கோட்டை என்பவர் வீர மரணத்தைத் தழுவிக்கொண்டார் இவரது புகழுடல் ஆறு கால்மடம் பகுதியிலுள்ள சிறிவைத்திலிங்கம் வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டது.

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா மற்றும் தனபால், ரஞ்சன் மாஸ்டர் ஆகியோர் அஞ்சலி உரை ஆற்றினர். பின்னர் கோப்பாயிலுள்ள மாவீரர் மயானத்தில் இவரது புகழுடல் தீயுடன் சங்கமமானது.

ஆனையிறவில் வீர மரணமடைந்த போராளிகளில் ஒருவரான பளை -கச்சார்வெளியைச்சேர்ந்த அலெக்ஸ் என்ற போராளியின்புகழுடல்நேற்று பிற்பகல் 5.40 மணிவரை தென்மராட்சியிலுள்ள வேம்பொடுகேணிப் பாடசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. ஏராளமான மக்கள் அலெக்ஸுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்

புல்லாவெளி இராணுவத்தினருடனான நேரடி மோதலில் கடந்த திங்கள் (29-7-91)

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துருக்கியில் கைவிடப்பட்ட இலங்கைத் தமிழர் விபரம்

(அங்காரா)

துருக்கியில்மார்மரிஸ் துறைமுகத்தில் அனாதரவாகக் கைவிடப்பட்ட 33 இலங்கையரில் 13 பேர் தமிழர்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு: வன்னியசிங்கம், ரதிபாஸ்கரன், எம். வனசிங்கம், சீத்தா தெய்வானை, இந்திரகுமார், கமல்தாசன், ராஜன்துரை, ரவீந்திரன் குமார், சுந்தரராஜா சுந்தரன், ஈஸ்வரன், நடராசா தாஸ், ஆறுமுகம், தருமராசா, சிவக்குமார் வீரகத்தி.

இந்திய சரக்குக் கப்பலில் பிரயாணம் செய்த இவர்களை கிரேக்கத் தீவான றோடஸ்தீவில் இறக்குவதற்கு பதிலாக துருக்கியில் மார்மரிஸ் துறைமுகத்தில் தரை இறக்கப்பட்டார்கள்.

இவர்கள் கொடுத்த விளக்கங்களும், மற்றும் விவரங்களும் தெளிவில்லாது உள்ளதால், இவர்களின் உறவினர் கொழும்பு வெளிவிவகார அமைச்சு, தூதரகப் பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

## அரசியல்வாதிகள், புலிகள் விசாரணை வேண்டும்

### - சுப்பிரமணியம்சுவாமி

விடுதலைப் புலிகளுக்கும், தமிழக அரசியல்வாதிகளுக்கும் உள்ள தொடர்பு குறித்து அரசாங்கம் விசாரணை நடாத்த வேண்டும் என்று ஜெயந்தி நடராஜனும், சுப்பிரமணியம் சுவாமியும் இந்திய மாநிலங்களவையில் கோரிக்கை விடுத்துள்ளனர். முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலையில் தமிழக அரசியல்வாதிகளுக்கு உள்ள தொடர்பும் அரசின் விசாரணையில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

## உணவுக் களஞ்சியத்தில் 40 கோடி ரூபா மோசடி

### 84 பேர் வேலை நீக்கம்

(கொழும்பு)

உணவுத் திணைக்களத்தில் மோசடி செய்த 84பேர் கண்டுபிடிக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இத் திணைக்களத்தில் நாற்பது கோடி ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ளது

இப்பணத்தில் ஓர் அதிகாரி ஆடம்பர மாளிகைகட்டி வாகனங்கள் பலவற்றை வாங்கியதுடன்பலதடவைகள் திருமணமும் செய்துள்ளாரென உணவுக் கூட்டுறவு அமைச்சர் வீரசிங்க மல்லிமாராட்சி தெரிவித்துள்ளார்.

உயர் அதிகாரிகள் முதல் சாதாரண ஊழியர் வரை இம் மோசடியில் ஈடுபட்டுள்ளனர். இரத்மலானை உணவுக்களஞ்சியம், நாரஹென்பிட்டி உணவுக்களஞ்சியம், கட்டுகஸ்தொட்ட உணவுக் களஞ்சியம் வெலிசறை உணவுக் களஞ்சியம், திருமலைக் களஞ்சியம் ஆகியவற்றிலேயே மோசடி இடம் பெற்றது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதில் திருமலை களஞ்சியத்திலேயே மிகப் பெரிய மோசடி இடம் பெற்றுள்ளது. இங்கு 60 இலட்சம் ரூபா மோசடி நடைபெற்றுள்ளது இதன் களஞ்சியப் பொறுப்பாளர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஓர்அதிகாரிதலைமறைவாகியுள்ளார். பயங்கரவாதத்தைக் காரணம் காட்டி தப்பிக்கொள்ள இங்கு மோசடிகள் புரிந்துள்ளனர்என விசா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கணக்கர் சந்தியில் விபத்து பலர் படு காயம்

கொழும்புத்துறையில் புங்கங்குளம் வீதியும், பிரதான வீதியும், சந்திக்கும் கணக்கர் சந்தி என்னுமிடத்தில் நேற்றுக் காலை பத்து முப்பது மணியளவில் வாகன விபத்து ஏற்பட்டது. ஒரு பிக்கப்ரக வாகனமும், வான் ஒன்றும்மோதிக் கொண்டதில் பத்திற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவ் விபத்தில் இரு வாகனங்களும் சேதமாகியதுடன் கடையொன்றின் முன்பக்கம் உடைந்து விழுந்ததனாலேயே வாகனத்தில் சென்றவர்கள் காயமடைந்துள்ளனர்.

(43) (11)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்காரம் (LIQUID SOAP) சகல தேவைக்கும் உதவுகிறது. அரைப் போத்தல் ரூபா 45/- பாவித்த வெற்றுப்போத்தல் லேபலுடன் திருப்பித்தந்தால் ரூபா 2/ கழிவு. "மில்க்வைற்" யாழ்ப்பாணம் (B/2880)

### ஆங்கிலம் ENGLISH

ஆங்கிலம் கற்பிக்கப்படும். ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கு விசேட பயிற்சி அளிக்கப்படும். V. N. Kandasamy; Inter (London A/L Part I London) 83, Adiyapatham Road Kokuvil East, Kokuvil (R/1596

### சோதிடம்

அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க ஜாதகம் எழுத, பலன் அறிய சோதிடர் V. A. சிவராசா 152 B அரசடி றோட், கந்தர்மடம்.

(R/1601)


### விழுதுகள்

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதல் மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதல் மற்றும் யாழ்ப்பாணம் பார்க்கஆசைப் படும் சிறிலங்காப் படையின ருடனானபலமோதல்கள் என் பனவற்றில் சிங்களப்படையி னரைக் குறிபார்த்த இவனது துப்பாக்கி 1990 இல் மீண்டும் அவர்களை குறி பார்த்தது. கோட்டை முகாம் இராணுவத்தை வெளியேற்றியது.

வரைபடத்தில்விடுவிக்கப்பட் டபிரதேசங்களின் அளவைபெரி தாக்குவதற்கு மீண்டும் முயற் சித்தான் ஆனையிறவு முகாம் தாக்குதலுக்காக இரவு பகல் பாராது கண்விழித்து உழைத் தான் இறுதியில் அந்தமுயற்சியி லேயே இவன் எம்மைப் பிரிந் தான். கடகடவென உருண்டு சென்ற அந்த வண்டியினால்

(8ஆம் பக்கம் பார்க்க


### காணவில்லை

நா. ராசலிங்கம். (கன்னாதிட்டி) ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (இல: 300022138V) வேறுபல தஸ்தாவேஜுகள் அடங்கிய கைப் பையும் ஏசியா சைக்கிளும் நல்லூர் கோயில் வாசலில் தவறுதலாகயாராலோ மாறிக் கொண்டு செல்லப்பட்டு விட்டன இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப் படும். [R/1602]

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**1990 1ம், 2ம், 3ம், 4ம் கல்வியாண்டு பரீட்சைகள்**

**கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்**

மேற்படி பரீட்சைகள் யாவும் ஒருமாத காலத்திற்குப் பிற் போடப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பின்பு அறிவிக்கப்படும்.

-பதிவாளர்

(B/2887)

### வட இலங்கை சங்கீத சபை

## வைர விழா 08-08-1991

மேற்படி வைர விழாவில் இதுவரை ஆசிரிய தராதரப் பரீட்சையில் (தரம் ஆறு) சித்தியெய்திய கலைஞர்களுக்கு விழாவின்போது விசேட பட்டமளிப்பு வைபவமும் நடைபெற உள்ளது. தகைமை பெற்றவர்கள் 03. 08. 1991 அன்று பி. ப. 4-00 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் தமது விபரங்களை ஒப் படைக்கவும்.

விபரங்களை வழங்கியவர்கள் 06. 08. 1991 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு யா/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் ஆரம்ப வைபவத்தில் தவறாது பங்குகொள்ளவும்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

இ. சுந்தரலிங்கம்
கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கைச்
சங்கீத சபைத் தலைவரும்.
(B.2870)

## விற்பனைக்கு

பூநகரியில் எருத்துமாடுகள்,
நாம்பன் குருவமாடுகள்,
பால்தரும் நல்ல இன பசு மாடுகள்,
இறைச்சிக்குப் பயன்படுத்தப்படும் மாடுகள்
என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:-

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி செயலகம்
வாடியடி, பூநகரி.

பார்வையிடும் இடம்:
பூநகரி 4 ஆம். கட்டை.
3 ஆம் ஒழுங்கை.

காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரையும் தொடர்பு கொள்ளலாம்.

(B/2885)


# நினைவு கூருகின்றோம்...

## 1991-08-02





**மேஜர் சூட்டி** | **குட்டி** | **மெண்டிஸ்**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் அடம்பனில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**சுனில்** (ஜோசப் குரூஸ் - சிறுகுளம் பரப்பங்கண்டல், மனனார்)
**விசு** (லிங்கநாதன் - மாளிகைத்திடல், மன்னார்)
**சங்கர்** (வேலுப்பிள்ளை செல்வம் - 5 ஆம் கட்டை, மன்னார்)
**விசுவநாத்** (சுந்தரம்பிள்ளை ஞானேந்திரன் - வட்டக்கண்டல், மன்னார்)
**திவி** (ஜெரோனிமோஸ் அனெக்லிக்டஸ் - வங்காலை, மன்னார்)
**காந்தன்** (செல்வராசா காந்தன் - அடம்பன், மன்னார்)
**சசி** (றேமன் ஜோன்லெஸ்லி - அடம்பன் மன்னார்)

1988 ஆம் ஆண்டு இந்தியப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமெய்திய

**கர்ணன்** (ஆனந்தன் - மன்னார்பிராந்தியம்)

1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை தீருவில் பகுதியில் இந்தியப் படையினர் இத்தினத்தில் இருந்து மூன்று தினங்களாக மேற்கொண்ட அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட 70க்கும் மேற்பட்ட தமிழர்கள்.

அரியாலையில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு உறவினர்களிடம் சடலமாக ஒப்படைக்கப்பட்ட தமிழ் இளைஞன்.

1990 ஆம் ஆண்டு எதிர்பாராத விபத்தினால் எமைப்பிரிந்த

**மேஜர் சூட்டி** (சீவரத்தினம் சிறீ நரன் - தையிட்டி, காங்கேசன்துறை)

பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினரின் நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**சிவன்** (தில்லையம்பலம் சிவனேசன் - சிவன்கோயில் வீதி, உருத்திரபுரம்)
**ஜெனனன்** (தி. ஜெயேந்திரன் - பரந்தன்)
**மெண்டிஸ்** (மங்களம் சந்திரசேகரம் - அளவெட்டி வடக்கு)

பாலம் போட்டாறு பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் மேற்கொண்டதில் வீரமரணமெய்திய

**லெப். சுந்தர்** (இராமசாமி சதாசிவம் - கப்பல்துறை, திருக்கோணமலை)
**குட்டி** (கந்தையா விநாயகமூர்த்தி - தம்பலகாமம் திருக்கோணமலை)
**றஞ்சித்** (பொன்னையா அன்ரன் சகாயகுமார் - சீனன்குடா, திருக்கோணமலை)
**தயாளன்** (நல்லலிங்கம் கிருபானந்தம் - வர்ணமேடு, தம்பலகாமம்)
**சுகந்தன்** (க. ஆனந்தராசா - கட்டைபறிச்சான்)

முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**மூர்த்தி** (தம்பிராசா ஆனந்தராசா - வராத்துப்பளை, பருத்தித்துறை)

புல்லுமலையில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**தனம்** (37 ஆம் குடியிருப்பு, மட்டக்களப்பு)

அம்பாறை - பொத்துவில் அகதி முகாமுக்குள் புகுந்த ஜிகாத் குழுவினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்

மட்டக்களப்பு சித்தாண்டி முருகன் கோயில் அகதி முகாமில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு செங்கலடி இராணுவ முகாமில் உயிருடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட 10 தமிழ் இளைஞர்கள்

வாழைச்சேனையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7 தமிழர்கள்.

திருமலை சுங்கான் குழியில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/ 2884)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

ஒரு போராளி வாழும் காலத்தில் அவனது வாழ்க்கை மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகஇருக்க வேண்டும். அவன் இறந்தபின் அவனது வாழ்க்கை பாடவிதானமாக இருக்கவேண்டும்.

பிரதித் தலைவர்
கோ. மகேந்திரராசா





## சூரியக் குழந்தைகள்

ஏந்திய ஆயுதம்...
தாங்கிய சீருடை...
இலட்சியம் இறுகப் பதிந்த
இதயங்களின் படையெடுப்பு-
இளம் புலிகளின் அணிவகுப்பு!

இருண்டு போன தாயகத்துக்கு
இன்னொரு விடியலைத் தர
இத்தனை சூரியக் குழந்தைகளா!

இத்தனையா?—
இன்னும் இன்னும்!
தொலைவையும் தாண்டி
பார்வையைத் தூர எறி?
இருளுமா இனி?

— செ. பொ. சிவனேஷ்



# விழுதுகள்

"சரா ஒரு பலாப்பழம் மாதிரி" -அவனுடன் பழகிய ஒரு விடுதலை விரும்பியின் கூற்று இது. வெளிப் பார்வைக்கு கோபக்காரனாகவோ,முரடனாகவோ தோற்றமளிக்கும் இவனது உண்மையான தோற்றம் அவனுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கே நன்கு தெரியும். அதனால் தான் வெளியே முள்ளாய்த் தோற்றமளித்து உள்ளே இனிய சுளைகளைத் தரும் பலாப்பழத்துக்கு ஒப்பிட்டார் அந்த விடுதலை விரும்பி. எதிரிகளுக்கு அவன் முள்தான். அவனை நேசித்தவர்களுக்கு அவன் சுளையாகவே இருந்தான்.

அதனால்தான் இந்திய இராணுவம், சரா எங்கே? எங்கே? என்று தேடித்திரிந்தது அவன் அவர்களுக்குமுள்ளாக இருந்தான். தென்கிழக்காசியப் பிராந்தியமே எமது எல்லைக்கு உட்பட்டதுதான் என்று நிமிர்ந்து நடந்து வந்தவர்களை பாடையிலும், படுக்கையிலும் போகவைத்தான் இவன். நேபாளத்தையும், பூட்டானையும் மனதில் நினைத்து வந்தவர்கள் 'பெடியன்கள்' இப்படிப் பாடம் படிக்க வைப்பார்கள் என்று அவர்கள் கருதவில்லைத்தான். 'சரா எங்கே? என்று விசாரித்துவிட்டுச் செல்லும் இந்தியப் படையினருக்கு 'காணவில்லை' - 'தெரியாது' என்று பதிலளித்த மக்கள் சாப்பிட்டுப்போ-பார்த்துப்போ என்று அவனை அரவணைத்தார்கள். இவனோடு கதைத்தவர்-சிரித்தவர் - சம்பந்தமில்லாதவர்கள் மீதெல்லாம் இந்தியப் படையினரின் சப்பாத்துக் கால்கள் பதிந்தபோது இவனுக்காக அதை ஏற்றுக்கொண்டார்கள். -அவர்களைப் பொறுத்தவரை இவனுக்காக எதையும் ஏற்றுக்கொள்ளத் தயார். இவனுக்கு ஒன்றும் நேரக்கூடாது. இவனோடும் இவனது குடும்பத்தினருடனும் சம்பந்தமுள்ளவர்களுக்கு இந்தியப் படையினர் செய்த கொடுமைகள்-கொடூரங்கள் எழுத்தில்வடிக்க முடியாது.

இந்திய இராணுவத்தினருடனான போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேதான் இவன் கையில் காயப்பட்டான். இவனைக் காப்பாற்றுவதற்காக ஒவ்வொருவரும் போட்டி போட்டுக்கொண்டு உதவினர். இவனைப் பத்திரமாக தமிழகத்துக்கு அனுப்பி வைத்தனர்.

தான் ஒரு போராளியாக உருவாகிய தமிழக மண்ணில் ஒரு நோயாளியாக இவன் நீண்டகாலம் அங்கேயிருக்க விரும்பவில்லை. பூரணமாகக் குணமாகாத நிலையிலும் மீண்டும் தமிழீழத்துக்கே செல்லத் துடித்துக் கொண்டிருந்தான். (1983ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியிலிருந்து பயிற்சிக்காக தமிழகம் வந்த போதும் இப்படித்தான் விரைவில் தமிழீழத்துக்கு செல்ல வேண்டும் எனத் துடித்தவன் இவன். மேற்கு ஜேர்மனியில் வசதியாக ஆனால் அகதியாக வாழ இவன் மனம் ஒப்பவில்லை. அகதி முத்திரை அடுத்த சந்ததிக்கும் குத்தப் படக்கூடாது என்பதற்காக அங்கிருந்து தமிழகம் வந்து இராணுவப் பயிற்சி பெற்றுக் கொண்டவன் இவன்.)

இவன் துடியாய்த் துடித்தாலும் இவனது உடல்நிலை கருதி இவனை தமிழீழத்துக்கு அனுப்ப முடியவில்லை இயக்கத் தலைமையால். பூரணமாகச் சுகமாகியதும் அனுப்பி வைக்கலாம் என முடிவு செய்தது. ஆனால் துரதிஷ்டவசமாக இவன் தங்கியிருந்த வீட்டில் இருந்து கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டான். அங்கிருந்து சென்னைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டான். செய்த குற்றத்துக்காக தண்டனை வழங்கப்படும் இடமான சிறையினுள் செய்யாத குற்றத்துக்காக இவனையும் ஏனைய போராளிகளையும் அடைத்து வைத்த இந்திய அரசு சுமத்துவதற்கு குற்றங்களைத் தேடித்திரிந்தது. கடைசியில் ஏதோ ஒரு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டது. அதைப் படிக்கும்போது தமிழில் கூடுதலான கதைப்புத்தகங்கள் அச்சிடப்படும் இடம் சென்னை தான் என்பது உறுதியாயிற்று. வெவ்வேறு வீடுகளில் இருந்தவர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் வெவ்வேறு பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். எல்லோருமே சென்னையிலுள்ள பௌத்த விகாரைக்கு குண்டுவைக்கப் போனவர்கள் என்று அந்தக் குற்றப்பத்திரிகைகள் பறைசாற்றின இவர்கள் தங்களைக் கண்டு தப்பி ஓட முயற்சிக்கும் போது தாங்கள் துரத்திப் பிடித்தார்களாம்- (இவ்வாறு தப்பி ஓட முனைந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுள் காலில்லாதவர்களும் அடங்குவர்)

இந்திய தேசியபாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இவ்வாறு சிறையில் அடைத்து வைக்கப் பட்டிருந்த போது லிங்கம் என்ற பெயருடனே இவன் இருந்தான். இந்தியாவிலும் சராவைத் தேடித் திரிந்தபடியால் சரா அங்கே லிங்கமானான். இந்தியாவில் இருந்து



லெப். கேணல்

## சரா

இவன் தமிழீழத்திற்குக் கொண்டு வரப்பட்ட போதும் இந்திய இராணுவத்தினரால் இவனை அடையாளம் காண முடியவில்லை. தனபதி லெட்டுவுடன் வந்த படியால் இவனும் இவனுடன் கூட வந்தவர்களும் தனியாக அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். மற்றவர்களுடன் பழக இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. காங்கேசன்துறை கடற்கரையிலும் கூட இவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது நீண்டகாலத்தின் பின் குளிப்பதற்கு மட்டும் வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள் அந்தச் சமயத்தில் கூட வேறு யாரும் இவர்களுடன் கதைத்துவிடாமலிருக்க காவல் வேறு.

இதே வேளை சராவுக்கு பெயர் லிங்கம்தான். மறந்தும் எவரும் சரா என்று சொல்லக்கூடாது என அந்தந்த முகாம் தலைவரால் அங்கு கைதிகளாக இருந்த போராளிகளும் ஆதரவாளர்களும் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். விசாரணை அறை என்ற பெயரில் சித்திரவதைக்கூடமாகஇருந்த இடத்தில் சராவைத் தெரியுமா? சரா எங்கே என்று கேட்கப்பட்டு உதைக்கப்பட்ட போராளிகளெல்லாம் 'சரா வைக்காட்டிக் கொடுத்த பழி மட்டும் எனக்கு வந்துவிடக் கூடாது என திடசங்கற்பம் செய்து கொண்டவர். இந்தியப் படையினரின் உளவுத் துறையினர் தொடர்ந்து மும்முரமாகப் பட்டுக்கொண்டேயிருந்தனர். ஆனால் இறுதியாக இந்தியப் படையினர் வெளியேறும் காலத்தில்தான் இவன் இனம் காணப்பட்டான். அதுவும் இந்தியப் படையின் திறமையல்ல. இவனை விசிற் பார்க்க வந்தவர்களைக் கண்ட ஈ.பி ஆர். எல். எவ் உறுப்பினர்கள் இவர்கள் விசிற் பார்க்கச் சென்றதானால் அது சராவாகத்தான் இருக்கும் என்று சொன்னதைக் கொண்டே இவன் இனங்காணப்பட்டான்ஆனால் அக்காலகட்டத்தில் பிரச்சினை இந்தியப்படை - ஈ. பி. ஆர். எல் எவ். குழுவினர் கையை மீறிச் சென்றுவிட்டது. அவர்களே நான் போறன் நீ போறன் என்று கப்பலில் இடம் பிடிக்கப் படாத பாடுபடும் காலம். இவனது விடயத்தில் இந்திய இராணுவம் தனது உளவுத் திறமையின் தோல்வியை ஒப்புக் கொண்டே சென்றது.

சிறையில் இருக்கும் காலத்திலேயே தான்மறைத்துவைத்த ஆயுதங்கள் எல்லாம் தான் குறிப்பிட்டபடி இயக்கத்தின் கைகளுக்குக்கிடைத்துவிட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான் இவன்.

தடுப்பு முகாமிலிருந்து விடுதலையானதும் மீண்டும் தீவிர

(7ஆம் பக்கம் பார்க்க)

# அடைக்கலம்

சிறுகதை

சுதாராஜ்

நான் மனைவியைத் தேடி வீட்டுக்குள் சென்றபோது அவள் குளிப்பை முடித்து அழகான சேலையில்... சுவாமி தரிசித்து, பூச்சூடி, குங்குமப் பொட்டிட்டுப் புனிதமாகத் தோன்றினாள்.

''இந்த வீட்டுக்குக் குடி வந்த நாளிலிருந்து இப்ப தான் என்ர மனம் நிறைஞ்சிருக்கு'' என்றேன்.

அவள் நாணம் மேலிட ''எப்படி வெளிக்கிட்டாலும் உங்களுக்கு ஏதாவது குறை தானே?... சரி, சரி!

இப்பவாவது இந்தத் திருவாய் மலர்ந்தது போதும்!'' எனத் தனது மகிழ்ச்சியை மனக்குறைபோல வெளிப்படுத்தினாள்.

''நான் அதைச் சொல்லவில்லை!''

''பின்னை எதை?'' என ஏமாற்றத்துடன் பார்த்தாள்.

''குருவிப் பிள்ளையள் கூடு கட்டுகினம்!''

''உண்மையாவா?''

ஆச்சரியம் அவள் முகத்தில் மலர்ந்தது.

நகருக்கு அப்பால் அமைதியான சூழலில் இடமெடுத்து நாங்கள் வீடு கட்டியதற்கே ஓர் உட்காரணம் இருந்தது. இங்கு வந்த நாளிலிருந்து எங்களுக்கு ஓர் ஆசை, எதிர்பார்ப்பு, இந்த வீட்டில் ஒரு சரணாலயம்போல் பிராணிகள் தானாகவே வந்து கூடு கட்டி வாசம் செய்ய வேண்டும் என்று. அதற்காக வீட்டைச் சூழ, பல பழ மரங்களையும், பூமரங்களையும் வளர்த்து ஒரு சோலையைப் போல் ஆக்கி வைத்திருக்கிறோம்; மரங்களில் சிறிய தட்டுக்களை அடித்து வைத்து அவற்றில் சிறு தானியங்களை போட்டு விடுவோம்; குருவிகள் பழவகைகள் சாப்பிட வரும்; பூக்களில் தேன் குடிக்கும். அணில் தானியங்களைப் பொறுக்கிச் செல்லும். ஆனால் ஒன்றுதன்னும் எங்கள் வீட்டில் கூடுகட்டி சீவனம் செய்ததில்லை. மரங்களில் வந்திருந்து இராகம் எடுத்துப் பாடுகின்றன. தங்களுக்குள் ஏதோ பேசி மகிழ்கின்றன. ஆனால் இரவில் நித்திரைக்கு எங்கோ பறந்துவிடுகின்றன. இது எங்களுக்கு ஒரு குறையாக இருந்தது. இப்போது அந்தக் குறை தீர்ந்தது போலோர் உணர்வில் என் பின்னே ஓடி வந்தாள் என் மனைவி.

குருவிகளைப் பார்த்துவிட்டு மகள் சொன்னாள் அப்பா உங்கடை கொண்டைக் குருவி தான் கூடுகட்டுகினம். என்ன...?

அவற்றுக்கு கொண்டைக் குருவி என பெயரிட்டதே நாங்கள்தான், உண்மையான பெயர் தெரியாது.

ஒரு கையில் அடங்கக்கூடிய சைஸ். நீளமான வால், மேற் சிறகு பிரவுன் நிறம். நெஞ்சின் கீழ்ப்பகுதி சாதுவான வெண்மை கலந்திருக்கும். வாலின் தொடக்க அடிப்பாகம் சிவப்பு. தலைப்பகுதி கறுப்பு. உச்சியில் எடுப்பான கொண்டை, விடியற்காலையில் முற்றத்தில் பிரம்புக் கதிரையைப் போட்டு சற்றுநேரம் அமர்வேன். மகளும் வந்து என்னோடு இருப்பாள். அப்போது... இந்தக் குருவிகள் வந்து மரக்கிளைகளில் ஒவ்வொரு சோடியாக மாறி மாறித் தாவி இருந்து பாட்டுப் பாடும்.

நானும் மெல்ல சீக்கா (விசில்) அடித்து அவற்றைப் போலஒலி எழுப்புவேன். மகள் விநோதமாகப் பார்ப்பாள்.

''என்னப்பா குருவியோட கதைக்கிறீங்களா?''

''ஓமம்மா...''

''என்ன கதைக்கிறீங்கள்?''

''எப்படிச் சுகமாக இருக்கிறீங்களா...?'' என்ன பெயர் என்று கேட்கிறேன்.''

''என்ன பெயராம்?''

''கொண்டைக் குருவி''

குருவிகளுக்கென வேண்டி வைக்கப்பட்டுள்ள 'சாமை' 'வரகு', போன்ற தானியங்களை மகள் எடுத்து வந்து வீசுவாள். நிலத்தில் தத்தித் தத்தி வந்து அவை தின் பொறுக்கும்.

சில நாட்களில் குருவிகளை காணாவிட்டால் ''குருவிகளை காணயில்லை... கூப்பிடுங்கோ!'' என மகள் கேட்பாள் நான் சீக்கா அடிப்பேன்.

சீக்கா சத்தம் கேட்டதும் அவை வந்துவிடும். சீக்கா ஓசைக்கும் சாப்பாட்டுக்கும் இடையில் ஏதோ அர்த்தத்தைப் புரிந்து வைத்திருக்கின்றன.

நாங்கள் தூரநின்று கவனித்தோம். கொண்டைக் குருவிகள் இரண்டும் ஒவ்வொரு செடிகளாக பறந்து சென்றன. அடர்ந்த செடிகளுக்குள்ளே பறந்து சென்று சோதித்துப் பார்த்து வந்தன. ஒரு செடியின் இலை சடைத்த நான்கு கிளைகள் காற்றில் ஆடி மரத்துக்கு பலமில்லாமல் இருந்தமையால் 'சப்போட்டாக' ஒரு கம்பை நாட்டி நாலுகிளைகளையும் சேர்த்துக் கட்டியிருந்தோம்.

குருவிகள் கூடமைப்பதற்கு அது பொருத்தமான இடமாக அமைந்துவிட்டது போலும், எங்கெங்கோ பறந்து சென்று தும்பு போன்ற மெல்லிய இழைகளைக் கொண்டு வந்தன.

''அட உண்மைதான்!'' என்றாள் என் மனைவி. இப்போது நான் சொன்ன விஷயத்தை நம்புபவள் போல.

மகள் என்னிடம் ஒரு கேள்வியைப் போட்டாள் ''அப்பா! குருவி எப்படி கூடு கட்டுகிற இடத்தை டிசைட் பண்ணுது?''

உடனே எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. வழக்கமாகவே நான் அப்படித்தான்- அதற்காகத் 'தெரியாது' என்ற அர்த்தமல்ல; எதையும் சிந்தித்துச் சொல்லுவேன்.

''மறைவான... பாதுகாப்பான இடமாகத் தேடி எடுக்கும்!''

''ஏன்?''

''அவையளுக்குப் பயம்! குஞ்சைக் காப்பாற்ற வேணும் தானே?''

''என்ன பயம்...? குண்டு விழுமென்றா?''

''பெரிய பறவையள் பிடிச்சிடும் தானே?... பிராந்து, வல்லூறு...''

''அப்ப... பிளேனுக்கு? பிளேன் குண்டு போடுமெல்லோ...? பிளேனுக்குப் பயமில்லையோ?''

அவளது கவலை எனக்குப் புரிந்தது. உள்நாட்டு யுத்தம் நடக்கிறது... விமானங்கள் திடுதிப்பென வந்து குண்டுகளை வீசுகின்றன.

''ஓமம்மா! பிளேனுக்கும் பயம்தான்! குண்டுச் சத்தம் அதுக்கு அதிர்ச்சியாயிருக்கும். முட்டை கலங்கும். குஞ்சு பொரியாது!''

தென்னந் தும்பைச் சுருட்டி எப்படியோ அதை ஒரு வளையம் போல ஒட்டி அலகிலே தூக்கி வந்தன.

தூர ஒரு மரத்தில் இரண்டும் இருந்து எச்சரிக்கையாக நாலாபுறமும் நோட்டமிட்ட பிறகு ஒன்று தும்பு வளையத்தைக் கொண்டு செடியின் உள்ளே போகும். அது மீண்டு வரும் வரை மற்றது எல்லாப் பக்கமும் நோட்டம் பார்த்தவாறே இருக்கும்!

மூன்று நாட்களாக ஒய்வொழிச்சல் இல்லாது தூரத் தூர பறந்து சென்று ஒவ்வொரு தும்பாகக் கொண்டு வந்து வேலை முடித்திருந்தமையால், மெதுவாகச் சென்று எட்டிப் பார்த்தேன். ஒரு பாதிச் சிரட்டையின் அளவில் மிக நேர்த்தியாக தும்பு வளையங்களை அடுக்கி அடுக்கி, மென் படுக்கையாக அந்தக் கூட்டை அமைத்திருந்தன.

'பாப்பம்! அப்பா, நானும் பார்க்க... காட்டுங்கோ!' என மகள் அங்காலயத்தாள் அவளைத் தூக்கி செடியினுள் உயரத்தில் இருந்தகூட்டை இலைகளை விலக்கிக் காட்டினேன்.

கொண்டைக் குருவிகள் இரண்டும் ஒன்றையொன்று அணைத்துக்கொண்டு தூர மரக்கிளையில் இருந்து எங்களையே பார்த்துக் கொண்டிருந்தன.

நாங்கள் அப்பால் விலகினோம். கூடு அமைந்திருக்கும் அந்தச் செடியை வேறு பிராணிகள் அண்மித்தால் மின்னல் வேகத்தில் பறந்து போய்த்தாக்கி அவற்றை கலைக்கும் குருவிகள், எங்களை நிதானமாக பார்த்துக் கொண்டிருப்பது ஆச்சரியத்தை அளித்தது. 'எங்களால் தங்களுக்கு எவ்வித ஆபத்தும் இல்லை' என அவை நம்புகின்றன போலும்!

இது எங்களுக்கு நல்ல பொழுது போக்காக அமைந்து விட்டது என்றே சொல்லலாம்! நாட்டில் யுத்த நடவடிக்கைகள் காரணமாக எனக்கு அலுவலகமும் இல்லை... பிள்ளைக்கு ஸ்கூலும் இல்லை. முற்றத்தில் கதிரையைப்போட்டு அமர்ந்து விடுவோம்!

''கீ...கீ...''

புதிய குரல் கூட்டிலிருந்து கேட்டது. குருவி எத்தனை முட்டைகள் இட்டது, எத்தனை குஞ்சுகள் பொரித்தன போன்ற விபரங்கள் எங்களுக்குத் தெரியாது. அதைப் பார்க்கப் போனால் குருவிகள் குழப்பம் அடையக் கூடும்... மிரட்சியில் வேறு இடத்துக்கு மாறிப்போய் விடக்கூடும் என்பதில் நாங்கள் எச்சரிக்கையாக இருந்தோம்.

கீ...கீ...கீ...

''அநேகமாய் இரண்டோ அல்லது மூன்று குஞ்சுகள் இருக்கும்!'' என எனது உத்தேசத்தைத் தெரிவித்தேன். ஒரு ஊகம்தான். நற்செயலாக அது ஒரேயொரு குஞ்சாகவும் இருக்கலாம். பெரிது படுத்திச் சொன்னால் கேட்கிறவர்கள் சந்தோஷப்படுவார்கள் என்ற எண்ணம்.

''அப்பா! குஞ்சுகளை நாங்கள் வைச்சு வளர்ப்பமா?''

''வளரட்டும்... இப்ப அதுகள் சின்னக் குஞ்சுகள் தானே?''

-ஆனால் அதற்கு 'சான்ஸ்' இல்லாமல் போய்விட்டது' ஒருநாள் பகற்பொழுது அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். இரவுமுழுவதும் ஓயாத குண்டுச்சத்தத்தினால் உறங்க முடியவில்லை. முகாமிலிருந்து ஏவப்படும் குண்டு எங்கெல்லாம் விழுந்து யாரையெல்லாம் பலியெடுக்கிறதோஎன்ற பதற்றம். ஒருவேளை அது இந்தப் பக்கம் வந்து விழுமோ? மகளை கொங்கிறீற் ஸ்லாப்டின் கீழ் படுக்க வைத்துவிட்டு நானும் மனைவியும் விழித்துக் கொண்டிருந்தோம்.

காலையில் சத்தங்கள் ஓய்ந்து இருந்தன. பத்திரிகையை வாசித்தவாறு கதிரையில் இருந்து அப்படியே கண்ணயர்ந்து கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் மனைவியின் குரல் கேட்டது;

''ஓடிவாங்கோ! ஓடிவாங்கோ!''

முற்றத்தில் நின்றவாறு மனைவி பதறிக் கொண்டு நின்றாள்;

''இஞ்சை ஓடி வாங்கோ''!

எழுந்த வேகத்தில் மகளையும் தூக்கிக் கொண்டு மறுபக்கமாகப் பதுங்குகுழியை நோக்கி ஓடினேன். குண்டு வீச்சு விமானம் வருவதாக இருக்கலாம். அது தான் மனைவி இப்படிப் பதறுகிறாள்.

நான் ஓடுகிற ஓட்டத்தைப் பார்த்து மனைவி சினந்து கொண்டாள்; ''ஏன் இப்படிப் பயந்து சாகிறியள்!''

அப்போதுதான் நிதானித்துப் பார்த்தேன். விமானத்தின் இரைச்சல் ஏதும் கேட்கவில்லை, மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்... என்ற கதைதான். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கையிலிருந்து மகளை கிடத்தி விட்டு... மனைவி அருகில் போனேன்.

செண்பகமா!... குருவிக் குஞ்சு...'' எனத் தடுமாறியபடி குருவிக் கூட்டுப் பக்கம் கையைக் காட்டினாள். என்னையும் பதற்றம் பிடித்துக் கொள்ள கூட்டை நோக்கி ஓடினேன்.

(5ஆம் பக்கம் பார்க்க)



கவிதை

## அந்த நாட்கள்

நினைவிருக்கிறதா தோழியரே
அந்த நாட்கள்...
முள்மீது படர்ந்த
அந்த வாழ்க்கை...

காலையில் கல்லூரி செல்லும்போதும்
மாலையில் வீடு திரும்பும் போதும்
நெருப்பைக் கடப்பது போலவே
பாதையில் நடப்போம்!

ஆங்காங்கே
காடைத்தனமாய்
சில முகங்கள்
இடர் புரியும்.
அருவருப்பான வார்த்தைகள்
காதுகளுள் பாயும்
ஈட்டியாய்
மனம் வெதும்ப
நிலம் பார்த்து
நாம் நடப்போம்
அடுப்படியில் இருக்கையில்
ஆரவம் கேட்டால்
பயந்த விழிகள்
சாளரத்தினூடாக பார்க்கும்.

மெல்லிதாய் இருள்படர்கையில்
கதவுகளை தாழிடுவோம்
கனவுகளில் கூட
கலவரக் காட்சிகள்...!
இன்று-

முட்கள் எம்பாதம்பட்டு
முனை முறிகின்றன
பாதைகள் கூட
பாய்விரிக்கின்றன.
இருள் கலைந்தோடுகிறது
எம்வரவால்

எங்கே அந்த நாட்கள்...
எங்கே அந்த முகங்கள்?...

--புவனா

## அடைக்கலம்..

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

குருவிக் கூடு தும்பு தும்பாக சின்னா பின்னமாகியிருந்தது. குஞ்சுகளைக் காணவில்லை. யுத்த நடவடிக்கையால் காணாமல்போன தங்கள் பிள்ளைகளின் கதியறியாது பதறும் பெற்றோர்களைப் போல, பெரிய குருவிகளிரண்டும் அவலக் குரலில் கத்திய வாறு சுற்றிச் சுற்றிப் பறந்தன... பறந்து பறந்து தேடின. செண்பகம் கச்சிதமாக தனது வேலையை முடித்திருந்தது.

செண்பகம் பொல்லாத பட்சி. சிவந்த அனல் கக்குவது போன்ற கழுகுக் கண்கள். குத்திக் கிழிக்கும் கூரிய சொண்டு (அலகு). சிறிய பாம்புகளையும் விஷப் பூச்சிகளையும் தனது ஆகாரமாக 'லபக்' கென விழுங்கக் கூடியது. பொதுவாக இது விஷ ஜந்துகளை ஒழித்துக்கட்டும் பிராணி என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் ஒன்று மறியாத அப்பாவியான சிறு ஜீவன்களையும் சாப்பிட்டு ஏப்பம் விடுகின்றதா?

நான் சோர்ந்து போனேன். மனைவி அழுவாரைப் போல நின்றாள். 'குஞ்சு... செத்துப் போய்ச்சா?' என மகள் கேட்டாள். அவள் கண்களில் நீர் துளிர்த்து வந்தது.

'யுத்த நடவடிக்கைகளால் நவம்பர் மாத இறுதிவரை வடபகுதியில் 16 545 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன' எனச் சற்றுமுன்னர் வாசித்த பத்திரிகைச் செய்திகூட என்னை பெரிதாகப் பாதிக்காதது போலிருந்தது. அழுது குளறும் இந்தக் குருவிகளுக்கு எப்படி ஆறுதல்கூற முடியும்?

மீண்டும் போய் கதிரையில் விழுந்தேன். தூக்கத்திலாழ்ந்து ஏதோ அர்த்தமில்லாத அரைக்கனவுகளில் மூழ்கியிட்டேன் போலிருக்கிறது.

'ஓடி வாங்கோ! ஓடி வாங்கோ!'

-முற்றத்தில் நின்றவாறு மனைவி திரும்பவும் பதறிக் கொண்டிருந்தாள்.

'இஞ்ச ஓடி வாங்கோ... அந்தா பாருங்கோ! எவ்வளவு சின்னக்குஞ்சு! குருவிக்குஞ்சு!'

குருவிக் குஞ்சா? திரும்பிப் பார்த்தேன். அந்தப் பெரிய 'கேற்' றின் கதவு இடைவெளியூடு தத்தித் தத்தி வந்தது. அப்போதுதான் நடைபழகும் ஒரு குழந்தையைப்போல நடக்கமுடியாது கஷ்டப்படுவது தெரிந்தது. என்னும் இறகு முளைத்த ஒரு பெரிய ஈயைப்போல வாசலில் நின்று 'கீ... கீ!' எனக் கூப்பிட்டது, 'உள்ளே வரலாமா?' எனக் கேட்பது போல முனகியது. காதுக்குச் சரியாக எட்டாமல் முனகும் குரல்.

ஓடிப்போய் அதைத் தூக்குவதற்காக கையைநீட்டினேன்; அப்படியே நிலத்தோடு படுத்துக்கொண்டது பயத்தில். கையிலெடுத்தபோது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது; அதன் நெஞ்சு துடித்துக் கொண்டிருப்பதை கையில் உணரமுடிகிறது. அப்போதும் முனகும் குரல 'கீ...கீ...'

'அப்பா! காட்டுங்கோப்பா பாப்பம்!' -என் மகள்.

'எங்க பாப்பம்...? என்ன, உங்கட... குருவிக்குஞ்சு தானே?' -என் மனைவி.

கையை மெதுவாக நீக்கிப் பார்த்தோம். அப்போதுதான் இறகுகள் முளைக்கத் தொடங்கியிருந்தன -மீன் செதில்களைப் போல.

'எவ்வளவு சின்னக்குஞ்சு!' என மகிழ்ந்தவாறே மகள் அதன் முதுகில் தன் விரலால் தடவினாள். அது உடலைச் சிலிர்த்தது — 'கீ... கீ!'

பழைய சம்பவமொன்று நினைவுக்கு வந்தது.

இந்த வீட்டிற்கு வந்த புதிதில் ஒரு தென்னைமரத்தடியில் எங்கள் கண்களில் முதலில் பட்டது - கலைக்கப்பட்டிருந்த ஒரு கூடுதான். தாறு மாறாய்ச் சிதறிக்கிடந்த தும்புகளையெல்லாம் விலக்கிவிட்டுப் பார்த்தோம். உள்ளே எதையும் காணோம். ஏதோ ஒரு துஷ்ட பிராணி கூட்டைச் சங்ஹாரம் பண்ணியிருக்கிறது என்பது புரிந்தது. பாதிக்கப்பட்டது எதுவோ என்று நாங்கள் விசனித்திருக்கையில்தான் அந்தச் சத்தம் வந்தது

'கீச்... கீச்...' என்ற மெல்லியதான சத்தம்.

ஒரு செடியின் பின்னால் மூலையில் அரண்டபடி காட்சியளித்தது ஒரு அணில்க்குஞ்சு. பெரிய அணிலைப்போல முழுமையாக ரோமம்முளைத்திருந்தாலும் தானாக தீனெடுக்கும் வயது வந்திருக்கவில்லை. தாயைப் பிரிந்து தவிக்கிறது என்பதை மிகவும் ஹீனமான கீச்... கீச் சத்தத்தின் மூலம் அது காட்டியது. அதை மெதுவாக எடுத்து என் உள்ளங்கையில் வைத்துக் கொண்டேன். தன்னுடைய அழகிய வாலைச் சுருட்டிக்கொண்டு அடக்கமாக படுத்துக்கொண்டது; எனது உடற்சூடு அதற்கு இதமாக இருந்திருக்க வேண்டும்

அந்த அணில் குஞ்சுக்கு முதலில் ஏதாவது ஆகாரம் கொடுக்கவேண்டுமென்று நினைத்தவனாய், மகளை அழைத்து ஃப்ரிஜ்ஜில் இருந்து பால் கொண்டுவரச் சொன்னேன். கிண்ணத்திலிருந்த பாலை ஒரு இங்க் ஃபில்டரால் எடுத்து அந்த அணில் குஞ்சின் வாயில் விட்டேன். அது முகத்தை உதறி பாலைக் குடிக்க மறுத்தது. 'ஏன் பாலைக் குடிக்க மாட்டேன் என்கிறது?' என்று நான் விழித்தேன், அப்போது என் மனைவி 'உடம்புச் சூட்டில் தாய்ப்பால் கொஞ்சம் வெதுவெதுப்பாக இருக்கும்' என்று எடுத்துச் சொல்லிய பிறகுதான் உறைத்தது. அவள் சொன்ன மாதிரியே பாலை இளஞ் சூடாக்கிக் கொடுத்த போது அந்த அணில் குஞ்சு குடித்தது!

ஆகாரம் எடுத்துக்கொண்ட அந்த அணில் குஞ்சு தன்னிச்சையாகப் போகட்டும் என கொண்டு போய் தென்னை மரத்தின் அடியில் விட்டேன், 'கீச்— கீச்...' என்று மரத்தை சுற்றிச்சுற்றி வந்ததே தவிர மரமேறிச் செல்ல அதற்குத் தெரியவில்லை. எங்களை ஒரு ஏக்கத்தோடு பார்த்தது அது. என்னை இப்படியே அனாதையாக விட்டு விடுவீர்களா? என்கின்ற கேள்வி அதன் பார்வையில்.

இந்த அணில் குஞ்சை நாங்கள் வைச்சு வளர்ப்பமா? என மகள் ஆசைப்பட்டாள். அதற்கு 'ராமர்' என்ற பெயரையும் சூட்டிவிட்டாள், வெகு சீக்கிரத்தில் 'இராமர்' எங்கள் குடும்பத்தில் ஒருவனாகி விட்டான். தினமும் நாங்கள் சாப்பிடும் போதெல்லாம் அவனும் சுவாதீனமாகப் பக்கத்தில் வந்து அமர்ந்து அதற்கு வைக்கும் உணவைத் தன் முன்னங் கைகளால் எடுத்துத் தின்னுவான். அந்தக் காட்சியே அலாதி அழகாக இருக்கும் அதைப்பார்த்து மகள் கை தட்டி ஆனந்தப்படுவாள்,

'உடலில், தெம்பும், பலமும் கூடிவிட்ட இராமரைச் சுதந்திரமாக உலவவிட்டிடலாம்' எனும் முடிவெடுத்தோம் அவனை இந்தமுறைதென்னை மரத்தின் அடியில் கொண்டு போய்விட்டபோது. இதற்கு முன்னால் ஏதோ பயிற்சிபெற்றது போல் சரசரவென்று உச்சிக்குச் சென்று திரும்பி எங்களைப் பார்த்து வாலைத் தூக்கித் தூக்கி ஆட்டி 'கீச்... கீச்' என்றான் 'இனி என்னைப் பற்றி பயம் வேண்டாம்' என அவன் எங்களுக்குச் சொல்வது போல இருந்தது.

இந்த அனுபவம் மகளுக்கு நினைவுக்கு வந்திருக்க வேண்டும்.

'அப்பா! அணிலைப் போல இதையும் நாங்கள் வைச்சு வளர்ப்பமா?

என்னிடத்திலும் அதற்கு ஆசை தோன்றியிருந்தாலும் அது எப்படிச்சாத்தியமாகும் என்ற கவலையும் கூடவே இருந்தது.

எனினும் 'ஓமோம்! வளர்க்கலாம்!' எனச்சொல்லி வைத்தேன்.

'ஐயோ பாவம்! சின்னக் குஞ்சு! தீனைக் கொத்திச் சாப்பிடக்கூட தெரிஞ்சிருக்காது செத்துப் போயிடும்! எனத்தனது அச்சத்தைத் தெரிவித்தாள் மனைவி;

'விரலால் சொண்டைத்திறந்து ஊட்டி விடலாம்தானே?'

'அதுக்கு என்ன சாப்பிடக் கொடுப்பீங்கள்?'

'வரகு, சாமை,பழவகைகள் நல்லாய்த்தான்! நீங்கள் நினைக்கிறது மாதிரி இல்லை இது குழந்தை! பதப்படுத்தாமல் கொடுத்தால் தொண்டையிலேயே அடைச்சுச் செத்துப் போயிடும்'

அவள் இரண்டாவது முறையாகவும்செத்துப் போய்விடும் என்ற வார்த்தையைப் பாவித்ததும் நான் உஷாரடைந்தேன். குருவிக்குஞ்சை வளர்ப்பதனால் சாப்பாடு ஒரு பிரச்சினைதான். குருவிகள் குஞ்சுகளுக்கு என்ன ஊட்டுகின்றன என்று தெரியவில்லை. பூச்சி புழுக்களா அல்லது பழவகைகளா...? அவற்றைத் தங்கள் வாயிலேயே மென்று பதப்படுத்திக் கொடுப்பதாகவும் இருக்கலாம்!

பூச்சிபுழுக்களை எவ்வாயில் போட்டு மெல்வதாவது...

குருவிக்குஞ்சைக் கண்ட சந்தோசத்தில் நாங்கள் கலந்துக் கொண்டிருக்க கொண்டைக்குருவிகள் பறந்து வந்தன. எங்களைச் சுற்றிப் பறந்து கீச்சிட்டு முறையிட்டன. மரக்கிளையில் போயிருந்து பார்த்தன, சற்று வித்தியாசமான தொனியில் அழுவதுபோல் குரல் எழுப்பின. ஆ! இந்தக் குருவிகள் எல்லாம் எவ்வளவு அருமையாக தங்கள் குதூகலத்தையும், மகிழ்ச்சியையும், வேதனைகளையும், சோகங்களையும் தெரிவிக்கின்றன!

தாயின் குரல் கேட்டுக்குஞ்சு கத்தத்தொடங்கியது.

'பாவம்! அதுக்குப் பசிக்குது போல... தாயும் வந்திருக்கு விடுங்கோ போகட்டும்!'

ஒரு மரக்கிளையில் குருவிக் குஞ்சை விட்டோம் தாய்க் குருவி அண்மையில் பறந்துவர இதுவாயைப் பிளந்துகொண்டு கத்தியது. தாய் தீனூட்ட எத்தனிக்கையில் எங்கிருந்தோ அந்தச் செண்பகம் பறந்து குண்டுவீசப்போகும் விமானத்தைப் போல் குத்திப் பதிந்து தாக்க வந்தது குருவிகள் இரண்டும் தொலைவில்பறந்து போயிருந்து அவலக் குரல் எழுப்பின. குஞ்சு தொப் என கீழ விழுந்தது 'கீ....கீ...'

அடைக்கலம் தேடிவந்த குஞ்சைத் திரும்பவும் அந்த யமனின் கையில் கொடுக்கப் பார்த்தோமே என்ற கவலையுடன் ஓடிப்போய்த் தூக்கினோம். நல்ல வேளையாகக் காயம் ஏதும் பட்டிருக்கவில்லை. குருவிக்குஞ்சைக்கையில் வைத்துக்கொண்டு... இனி என்னசெய்யலாம் என ஆராய்ந்தோம். அப்போது மனைவி ஒரு திட்டத்தைச்சொன்னாள்

'கிளிக்கூடு போல... கம்பி வலையால் அடைச்ச கூட்டிலை குஞ்சைவிட்டு ஒரு மரத்திலை கட்டிவிடலாம். வலையை ஒரிடத்திலை கொஞ்சம் நீக்கி பெரிய ஓட்டை ஆக்கிவிட்டால் தாய்க்குருவி அதற்குள்ளாலை எட்டி தீன் குடுக்கும்.... குஞ்சு பறக்கக் கூடியதாய் வளர்ந்த உடனே திறந்துவிடலாம்'

இது நல்ல 'ஐடியா' வாகப் பட்டது. நான் குதூகலத்துடன் சொன்னேன். 'அப்ப எங்கடை வீட்டிலையும் ஒரு அகதி முகாம்.'

'அகதி முகாமோ... என்னவோ அடைக்கலம் என்று வந்த ஜீவனை பாதுகாக்க வேண்டியது எங்கடை பொறுப்பு.'

இதற்குப் பிறகு நாங்கள் துரிதகதியில் செயற்பட்டு கூட்டிலே குஞ்சைவிட்டு, மரக்கிளையில் கட்டினோம். இப்படிச் செயற்கையான கூட்டில் அடைபட்டிருக்கும் குஞ்சுக்கு ஊட்டுவதற்கு தாய்க்குருவி வருமா என்ற சந்தேகம் இன்னும் எனக்கு இருந்தது.

-கொண்டைக் குருவிகள் ஒவ்வொரு மரமாகப் பறந்து பறந்து குஞ்சைப் பெயர் சொல்லி அழைத்தன. குஞ்சு வாயைப் பிளந்து குரல்கொடுத்ததும், ஒரு குருவி சட்டெனப் பறந்து வந்து கூட்டுக்கு அண்மையில் இருந்தது. கூட்டின் ஒவ்வொரு வலைக்கண்களூடும் முகத்தைச் செலுத்திச் செலுத்தி.... உள்ளே நுழையப் பிரயத்தனம் செய்தது அந்தப் பெரிய ஓட்டை.... அதனூடு தலை நுழைவாக உட்செல்றதும்... இன்னும் கொஞ்சம் முயற்சித்து... ம்... ம்... எனச் சிறகை ஒடுக்கி... இழுத்து உள்ளே போய்விட்டது 'அப்பாடா' என மூச்சு வாங்குவதற்குள் அதற்குப் பயம் பிடித்துக் கொண்டது போலும். 'பிள்ளையைச்சிறை மீட்க வந்து தானும் அகப்பட்டுக்கொண்டேனா? -குருவி வெளியேறுவதற்காக சிறகடித்து கூட்டுக்குள்ளேயே பறந்து பறந்து வலைக் கண்களில் முகத்தைக் குத்திக்குத்தி அமர்க்களப்படுத்திக்கொண்டிருந்தது.

ஓடிப்போய்க் கதவைத் திறந்தேன் 'அப்பா! திறக்க வேணாம்! ரெண்டையும் வளர்த்தால்... தாய், குஞ்சுக்குத் தீன் குடுக்குந்தானே?'

'இல்லையம்மா! பாவம் அது பயப்பிடுது போகட்டும்!'

கதவைத் திறந்ததும்எய்த அம்புபோல வெளியே பறந்து போனது.

ஆனால்தாய்ப்பாசம்யாரை விட்டது? சிறு பூச்சி புழுக்களைக் கொத்திக் கொண்டு திரும்பவும் கூட்டுக்கு அண்மையாக வந்திருந்து சோகமாக அழத் தொடங்கியது. மற்றது பக்கத்தில் வந்து வேறுதொனியில் பேசியது. 'கீக்! கீக்!' பசியில் அழும் குழந்தைக்கு ஒரு புதிய குரலில் ஆறுதல் சொன்னவாறு மெல்ல மெல்ள ஒவ்வொரு கிளையாக முன்னேறி... எதற்கும் துணிந்ததுபோல் சட்டென கூட்டுக்கு அண்மையில் பறந்து சென்று வலைக் கண்களூடு அந்தப் பெரிய துளையைத் தேடி 'ம்... ம்...' ஒரே மூச்சில் உள்ளே போய்விட்டது.

நாங்கள் ஆவலுடன் பார்த்தோம்.

'சரி! சரி! குஞ்சுக்குத் தீன் குடுக்குது' எனத் துள்ளிக் குதித்து மகிழ்ந்தாள் மகள்.

குஞ்சுக்குத் தீன் ஊட்டிய பின்தான் குருவிக்கு அடுத்த பிரச்சினை தெரிந்தது. இனி எப்படி வெளியே போவது? சிறகடித்து அதே எத்தனிப்பு... வலைக்கண்களில் முகத்தைக் குத்திக் குத்தி...

கதவைத் திறந்துவிட்ட போது கவனித்தேன்; பாவம், தாய்க்குருவியின் அலகுக்கு மேலாக வலைக் கம்பியில் உரசிய சிதைவின் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அதைப் பொருட்படுத்தாமல் அன்று முழுவதும் குருவி பலமுறை வந்து... தீன் கொடுத்து வலைக்கண்களில் குத்திக்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஆனந்தவிகடன் விழிப்பு உணர்வு சிறுகதைப் போட்டியில் ரூபா 5,001 பரிசு பெற்ற சுதாராஜின் அடைக்கலம் என்ற சிறுகதை ஈழநாதத்தில் மறுபிரசுரம் செய்யப்படுகிறது. இக்கதை ஜூன் 16, 1991- ஆனந்த விகடன் இதழில் பிரசுரமாகியது;

யாழ்ப்பாணம் நல்லூரைச்சேர்ந்த சுதாராஜின் இயற் பெயர் இராஜசிங்கம். தந்தை பெயர் சிவசாமி.

சுதாராஜ் இலங்கையில் மின் பொறியியல் பட்டதாரிக் கற்கை நெறியை முடித்து விட்டு மத்திய கிழக்கிலும், பாகிஸ்தானிலும் பல்வேறுபணிகளில் ஈடுபட்டு, இப்போது இத்தாலியில் தொழிற்சாலை நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

இனி வருமா உலகம்? என்பது சுதாராஜின் முதற்சிறுகதை வடிவமாகும். இது 1971-இல் பிரசுரமாகியது. வீரகேசரியில் இளமைக்கோலம் என்ற தொடர் நாவலையும் எழுதியுள்ளார். இவரின் தொகுப்புகள் என்ற சிறுகதைத்தொகுப்பு, சிறந்த சிறுகதைத் தொகுப்பாகப்பாராட்டப்படுகிறது. சுதாராஜ் இதுவரை சுமார் ஐம்பது கதைகள் எழுதியுள்ளார்;

இன்றைய தமிழீழச் சூழலில், மனிதனின் அடிமனதை ஊடுருவும் எழுத்தாக அடைக்கலம் அமைந்துள்ளது.

(நன்றி:- ஆனந்தவிகடன்)

### ஓநாய் மனிதன்

குழந்தைப் பருவத்தில் காணாமல் போகும் குழந்தைகள் வளரும் சூழலுக்கேற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றன ரஷ்யாவின் காட்டுப்பாதையில் ஓநாய்களினால் தூக்கிச் செல்லப்பட்ட குழந்தை ஒன்று ஏழு வயது வரை ஓநாய்க்கூட்டத்தில் வளர்ந்தது. டியூமா என்னும் பெயருடைய இம்மனிதன் 1962 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டான் வயது 30 ஐந்தாண்டியும் பச்சை இறைச்சியை உண்ணுதல், கை கால்களைப் பயன்படுத்தி 4 கால் நடையும், இரவில் ஊளையிடுதல், கோபம் வந்தால் உருண்டு பிரண்டு ஆர்ப்பாட்டம் செய்தல் என்பனவற்றைக் கை விடவில்லை. சில சொற்களைப் பயின்று பேசுவதற்கு இவனுக்கு 4 வருடங்கள் பிடித்தன.

ஒரு முறை மிருகக்காட்சிச்சாலைக்குச் சென்றபோது இவரடைந்த மகிழ்ச்சி சொல்லிலடங்காது. தொலைக் காட்சியில் ஓநாய்க் கூட்டங்களைக்கண்டபோது.

"அம்மா! நான் இங்கு இருக்கிறேன் என்னையும் கூட்டிக்கொண்டுபோவேன்" என்று வீறிட்டு அழுதார். தனது இனத்தைக் கொன்று தன்னை இங்கு கொண்டு வந்து விட்டதாக அடிக்கடி தெரிவிக்கிறார்.

# கட்சிபேதங்களை மறக்க வைத்த

# காவிரி நீர்ப் பிரச்சினை

காவிரி ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாகக் கர்நாடகாவுக்கும்தமிழ் நாட்டிற்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் தடம் புரண்டு போனதன் விளைவாக உச்ச நீதிமன்றத்தின் பணிப்புரையின் பேரில் காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. 25 வருடங்களாக அநுமான் வால் போல நீண்டு கொண்டிருந்த காவிரி நீர் விவகாரத்தை மூன்றாவது அமைப்பொன்றின்மூலம் தீர்ப்பது பயன் பொருத்தமுடையது என்று தமிழ்நாடு கருதியது. கர்நாடகம் வேறு விதமாகவே பிரச்சினையை அணுகியது. பேச்சு வார்த்தைமூலம் இணக்கம் காண்பதையே அது விரும்பியது.

கர்நாடகம் உட்பட கேரளம், தமிழ்நாடு மாநிலங்களும் மற்றும் பாண்டிச்சேரியும் காவிரியால் பயனடைகின்றன. மேற்கு மலைத்தொடரில்

என்று மரபு வழிக் கதைகள் தெரிவிக்கின்றன. தொடர்ந்தாற்போல் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் காவிரி நீர்ப்பிரச்சினை தலை தூக்கியது.

காவிரிநீரைப் பகிர்ந்து கொள்வது சம்பந்தமாக 1890 இல் முதல முறையாக மைசூர் அரசுக்கும் (இன்றைய கர்நாடகம்) சென்னை இராஜதானிக்கும் இடையில ஓர் உடன்பாடு கைச்சாத்தாகியது இதனைத் தொடர்ந்து மற்றொரு ஒப்பந்தம் 1924-ல உருவாகியது. இவ்வொப்பந்தங்கள் பிரச்சினைக்குரிய இரு மாநிலங்களிலும் நீர்ப்பாசனங்களை விருத்திசெய்ய வழிவகை செய்தது. ஒப்பந்தங்களின் பிரகாரம் கர்நாடக மாநிலத்தில் 45 ரி. எம். சி அடி கொள்ளளவு கிருஷ்ணராஜசாகரமும், தமிழ் நாட்டில் 93 ரி.எம் சி அடி கொள் அளவு மேட்டூர் அணையும் கட்டப்பட்டன. இதன் விளை

## காவிரி நடுவர் மன்றம்

மாநிலங்களுக்கு இடையிலான நீர் தகராறுச் சட்டம் 1956 கீழ் நடுவர் மன்றம் ஒன்றை நியமிக்குப்படி தமிழ் நாடு அரசு மத்திய அரசைக் கோரியது. கர்நாடக அரசு இதை வன்மையாக எதிர்த்தது. இறுதியில காவிரி கழிமுகவிவசாயிகள் நலன்புரிச்சங்கம் நடுவர்மன்றம் அமைக்கக் கோரி உச்சநீதிமன்றில் மனுத்தாக்கல்செய்தது இதன் விளைவாக நடப்பு ஆண்டின் ஆரம்பப் பகுதியில்காவிரி நடுவர்மன்றம்-

ஊரில் நீர் பற்றாக்குறை ஏற்பட்டது. 15 ரி எம் சி. அடி நீரை வழங்கி உதவும்படி தமிழ் நாடு கோரியுள்ளது. இக்கோரிக்கையை கர்நாடகம் வக்கிரமாக மறுத்துவிட்டது. எப்படியாயினும் வருட இறுதியில் மழை பெய்ததால் பயிர் அழியவில்லை.

தமிழ்நாடு நீரை வீண் விரயம் செய்து வருவதாகக் கர்நாடக அரசு குற்றம் சாட்டியுள்ளது. இதேவேளை தமிழகத்திலும் 29 வீதம் வரட்சிப் பிரதேசம் என்றும் கர்நாடக பள்ளத்தாக்கில் சுமார் 64 விகிதம் வரட்சி நிலம் என்றும் கர்நாடக அரசு கிவாதிக்கிறது. ஆகவே சொந்த நாட்டில் வரட்சிப் பிரதேசத்துக்குத் தேவையான காவிரி

ளாளர் தொழிலை இழந்துள்ளார்கள் என்று தமிழ் நாடு அரசின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சுமார் 6 இலட்சத்திற்கு அதிகமான சிறு, நடுத்தர கமக்காரர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தஞ்சாவூரின் பொருளாதார முன்னேற்றம் சீரழிந்து விடும் எனவும் அஞ்சப்படுகிறது.

காவிரி ஆற்று நீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் காவிரி நடுவர் மன்றம் தமிழ் நாட்டிற்கு 205 ரி எம் சி அடி தண்ணீர்வழங்கும்படி இடைக்காலத் தீர்ப்பொன்றை வழங்கியது. ஆனால் இத்தீர்ப்பை அமுல்படுத்த கர்நாடக அரசு மறுத்துவிட்டது. ஆத்திரமடைந்த தமிழக அரசு நீதி கோரி உச்ச நீதி மன்றத்தை அணுகியுள்ளது. கர்நாடக அரசும் இடைக்காலத் தீர்வை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்துள்ளது. வழக்கை வாபஸ் பெறுவதென்ற பேச்சுக்கே இடமில்லை என்று கர்நாடக முதல்வர் பங்காரப்பா கண்டிப்பாக உள்ளார். கர்நாடக அரசைத் தட்டிக் கேட்க, கர்நாடகத்தின் செயல் பற்றித் தீர்மானிக்க மத்திய அரசும் தயங்கி உச்ச நீதி மன்றின் ஆலோசனையைக் கோரியுள்ளது. இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டு இணைத் தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தி தமது தொழிலாளர் நல அமைச்சர் பதவியை உதறியெறிந்துள்ளார். சட்டத்துறை இணை அமைச்சர் ரங்கராஜன் குமார மங்கலமும் பதவியை இராஜினாமாச் செய்து பிறகு வாபஸ்பெற்று காங்கிரஸ் வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளார்.

காவிரி நீர் விவகாரத்தில் இரு மாநிலங்களிலும் கட்சி பேதங்களை மறந்து அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. இதன் வெளிப்பாடாக கடந்த 26 ஆம் திகதி இரு மாநிலங்களிலும் கடை அடைப்பு அனுஷ்டிக்கப்பட்டது.

காவிரி நீர்ப் பிரச்சினை மத்திய அரசு மிக அமைதியாக ஆராய்ந்து செயற்பட வேண்டிய காரியம். மத்திய அரசு நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தத் தவறினால் விளைவு விபரீதமாக முடியும்.

> 18ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னன் அப்போது கன்னடத்தை ஆண்டு கொண்டிருந்த குப்பு சுல்தானுக்கு எதிராக படை நடத்திச் செல்லுமளவுக்கு அப்போதிருந்து இன்று வரை இப்பிரச்சினை நிலவுகின்றது.

> தமிழ் நாட்டை 'அரை வரண்ட வெப்பப் பிரதேசம்' என்றே கூறலாம். தமிழ் நாட்டிற்கு மழை மூன்று பருவங்களில் கிடைக்கிறது; வட கிழக்குப் பருவக் காற்றால் கிடைக்கும் மழை அளவில் அதிகமானது. தென் மேற்குப் பருவக்காற்றால் கிடைக்கும் மழை மிகக்குறைவு கோடை மழையும் தமிழ் நாட்டிற்குக் கிடைக்கிறது. எல்லாமாக வருடத்துக்கு மூன்று மாதங்களே மழைக் காலங்கள். மழை தவிர நன்னீருக்கு வேறு வழியில்லாததால் மிகுதி ஒன்பது மாதங்களுக்கு மழை நீரைச் சேகரித்து வைக்க வேண்டியிருக்கிறது. நேரடியாக தமிழ் நாட்டின் சமதரைப் பிரதேசத்தில் பெய்யும் மழையைத் தவிர, அண்டை மாநிலங்களில் தொடங்கி தமிழ் நாட்டில் முடியும் ஆறுகளையும் விவசாயத்துக்கு நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

பெய்யும் மழை அண்டை மாநிலமான கர்நாடகாவில் காவிரியாகப் பிறப்பெடுத்து தமிழ் நாட்டின் சமதளத்தில் ஊழிந்தோடிக் கடலில் கலக்கிறது. இதனால் கர்நாடக அரசு காவிரிநீருக்குத் தானே எசமானர் போல் நடந்து கொள்கிறது. பிரச்சினை சிக்கலடைகிறதே தவிர தீர்வதாக இல்லை.

நீதியரசர் சி. முக்கர்ஜி தலைமையிலான நடுவர் மன்றம் 1991 பெப்ரவரி 19-26 ஆம் திகதி வரை கர்நாடக மாநிலத்தில் மண்டியா, மைசூர், ஹசன் கூர்க் மாவட்டங்களையும் மற்றும் ஹேமாவதி, காபினி, ஹறங்கி நீர்ப்பாசனங்களையும் பார்வையிட்டது. நடுவர் மன்றம் மார்ச் 23-27 வரை தமிழ்நாட்டில் காவிரி நீரால் பயனடையும் பகுதிகளை பார்வையிட்டுத் தளநிலைமையை அறிந்து கொண்டது.

## காவிரி ஆற்று நீர்ப்பிரச்சினை

இந்தியாவின் பகுதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் நீரைப் பெறுகின்றன' தமிழகத்தின் பெரும் பாகம் உப்பு நீரால் சூழப்பட்டிருப்பதால் தமிழ்நாட்டில் மழை தான் நீருக்கான முக்கிய மூலமாகும். தமிழ்நாடு மேற்கே மேற்கு மலைத் தொடர்ச்சியையும் கிழக்கேகிழக்குமலைத் தொடர்ச்சியையும் கொண்டுள்ளது; மேற்கு மலைத் தொடர்ச்சியில்பெய்யும் மழை நதிகளாக சமநிலத்தில் வழிந்தோடிக் கடலில் கலக்கிறது. இதில் காவிரியும் ஒன்று.

காவிரி நீரைத் தமக்கிடையில் பகிர்ந்துக் கொள்வது தொடர்பாகத் தமிழ்நாடும் கர்நாடகாவும் நீண்ட காலங்களாகவே மல்லாடிக்கொண்டிருக்கின்றன, 18ஆம் நூற்றாண்டில் திப்பு சுல்தான் காவிரியைத் தடைசெய்யும் வகையில அணை ஒன்றை அமைத்தார். இதனைக் கேள்வியுற்ற தஞ்சாவூர் நாயக்க மன்னன் மைசூரின் மேல் தனது படைகளை நடத்திச் சென்றான்

வசக நீர்ப்பாசனம் பெறும் பிரதேசத்தின் அளவு தமிழ் நாட்டில் 3,10,000 ஹெக்டேயராகவும், கர்நாடகாவில் 1,10,000 ஹெக்டேயராகவும் அதிகரித்தன. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் உள்ள வாசகங்களின்படி 50 வருடங்களுக்குப் பிறகு - 1974 இல ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். காலப்போக்கில் தமிழ் நாடு அணைக்கட்டுகளை விஸ்தரித்தது. இது ஒப்பந்தத்தை மீறும் வகையில் அமைந்த செயல்என்பது கர்நாடகாவின் நிலைப்பாடாகும். நீர் வீண்

## மதன்

விரயமாவதைத் தடுப்பதற்கே இந்த ஏற்பாடு என்று தமிழ்நாடு கூறியது. 1970 களின் ஆரம்பத்தில் கர்நாடகாவும் ஹேமாவதி, காபினி, ஹறங்கி ஆகிய மூன்று அணைக்கட்டுகளை நிறுவியது. இவற்றின் ஒட்டுமொத்த கொள்ளளவு சுமார் 65 ரி.எம் சி அடிகளாகும். தமிழ் நாட்டின் கருத்துப்படி இது 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறிய நடவடிக்கையாகும்.

மீண்டும் ஒரு ஒப்பந்தம் கர்நாடக - தமிழ்நாடு முதலமைச்சர்களுக்கிடையில் 1976 ஆகஸ்ட் மாதத்தில் கைச்சாத்தாகியது இதனடிப்படையில் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்கள் முறையே 476 : 177 : 23 விகிதத்தில் நீரைப் பெறுவது என்று தீர்மானிக்கப்பட்டது. பதினைந்து வருடங்களுக்குப் பிறகு விகிதத்தை 380:239: 51 என்று மாற்றுவதென்றும் இரு தரப்பினரும் தமக்குள் இணங்கிக்கொண்டனர். இந்த அடிப்படையில் ஒரு ஒப்பந்தம் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்டது இதுதான் முதற்தடவையாகும். முளையில் கருகும் வகையில் எம். ஜி. ஆர் அரசினால் இந்த ஒப்பந்தம் முறியடிக்கப்பட்டது.

Cauvery Waters Dispute Tribunal உச்சநீதி மன்றத்தின் உத்தரவின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டது.

கர்நாடகஅரசு ஒரு தொடர் நடவடிக்கையாகவும், பதிலடியாகவும் மேட்டூர் அணைக்கு நீர் வழங்குவதை நிறுத்திக் கொண்டது.

தமிழ் நாட்டில் நீருக்கு இருந்தல் நிலவிய போதிலும் கடந்த இரு வருடங்களில் பருவ மழை தவறாது பெய்ததால் தஞ்சாவூரில் விவசாயம் தப்பிப் பிழைத்தது கடந்த ஆண்டு டிசம்பரிலும், இவ்வாண்டு ஜனவரியிலும் தஞ்சா

நீரை நுகர்வதில் தவறு இல்லை என்பது கர்நாடக அரசின் கருத்தாகும். நவீன முறைகளின்படி தண்ணீரை முறையாகப் பேணிக் காத்து வருவதால் தண்ணீர் விரயமாகிறது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தமிழ்நாடு தரப்பில் சொல்லப்படுகிறது.

மேட்டூர் அணையில் நீர் பற்றாக்குறை ஏற்பட்டதால் வழமைபோல் அல்லாமல் கோடைவேளாண்மை 75,000 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டது. காவிரி ஆற்று நீர் தட்டுப்பாட்டினால் 10 முதல் 12 இலட்சம் நிலமற்ற தொழி

## அடைக்கலம்....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குத்தி வெளியே வரத்தவித்தது.... நாங்கள் திறந்து விட பறந்து போனது.

இவ்வளவு தெரிந்தகுருவிக்கு பொறுமையாக இருக்கதெரியவில்லையே... வேலையில்லாத ஒருவன் வந்து திறந்து விடுவான் என்று புரியவில்லையே என்ற கவலை எங்களுக்கு மாலைக்குள் அதன் முகத்துக் காயம் ஒரு புண்ணாக மோசம் அடைந்திருந்தது. எனினும் குருவி அதை லட்சியம் செய்யவில்லை.

அதற்கு தன் தாய்ப்பாசம் பெரிதாக இருக்கலாம். அதனால் தன் முகப் புண்ணைப் பெரிது படுத்தாமல வந்து போகலாம். ஆனால் இதை எங்களால் லட்சியம் செய்ய முடியவில்லை: மறுநாள் மிருக வைத்தியரிடம்கேட்டே அதன் புண் ஆறக்கூடியதாக மருந்து வேண்டி வந்தோம். அடுத்த முறை குருவி கூட்டுக்குள் வந்ததும் திறந்து விடுவதற்குமுன் பிடித்து அதன் புண்ணில் மருந்தைத்தடவிபறக்கவிட்டோம்

'ஓட்டைபெரிசாக இருக்கிறபடியால் தான் குருவி கூட்டுக்குள்ளே போகுது! அதைக் கொஞ்சம் சிறிதாக்கி விடலாம்... தலை மட்டும் உள்ளே நீட்டக்கூடியதாக!'

தனது முன்னைய 'ஐடியா' வுக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தாள் மனைவி. எனினும் இதை உடனடியாக ஏற்றுக்கொள்ள இஷ்டமில்லை;

"அதெப்பிடி...? குஞ்சு அருகில் வந்து தீன் வாங்கவேண்டுமே!?

'நீங்கள் அப்பிடிச் செய்து பாருங்கோவன்! ரெண்டு, மூன்று முறைக்குப் பிறகு குஞ்சு தானாகவே பழகிவிடும்!'

அவள் சொன்னது சரிதான். இத்திட்டம் வெற்றியளித்தது. கூட்டுக்கு உள்ளே போகமுடியாமல் தலையை மட்டும் உள்ளேவிட்டு தாயின் அழைப்பைக் கேட்டதும் குஞ்சு முதலில் தயங்கி

(7 ஆம் பக்கம் பார்க்க)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
06 - 06 - 1963

தாயக மண்ணில்:
02 - 08 - 1990

**மேஜர் சூட்டி**
**(சிவரத்தினம் சிறீதரன்)**

மன்னாரில் படை நடத்தி
சாதனைகள் படைத்து நின்றாய்!
பலாலிப் படைகளையும்
முகாமுக்குள் முடக்கி வைத்தாய்!
எதிரிக்கு எமனாக
களத்தில் நிமிர்ந்து நின்றாய்!
விபத்திலே மறைந்து- எம்
மனத்திலே நிறைந்து விட்டாய்!

தையிட்டி, -பெற்றோர், சகோதரர்.

(B/2886)

# தென்னாசிய வலுச் சமநிலையை பாதிக்கும் சக்திகளில் ஒன்றாக விடுதலைப் புலிகள்

மூன்று வாரங்களுக்கு மேலாகியும் ஆனையிறவில் பெரும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போரில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதும் கனரக ஆயுதங்களுடன் கூடியதுமான பல்லாயிரம் பேரைக் கொண்ட சிறிலங்காஇராணுவத்துடன், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஆனால் கனரக ஆயுத தளபாட வசதிகள் அற்ற எண்ணிக்கையில் சில ஆயிரம் வீரர்களைக் கொண்ட விடுதலைப்புலிகளும் மோதுகின்றார்கள்.

சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு பதினெட்டு நாட்களுக்கு மேலாகியும் வசதிகள் பெற்ற சிறிலங்கா இராணுவத்தால் இயலவில்லை. சிறிலங்கா இராணுவம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் விடுதலைப் புலிகளின் பலமான எதிர்ப்பு அவர்கள் முன்னேற்றத்தை மட்டுப்படுத்தி வைத்துள்ளது.

## தென்னாசியாவில் ஆறாவது படைஅணி

ஆனையிறவுப் பெரும் போருக்கு முன்னரே விடுதலைப்புலிகள் மரபுவழிப் போர் முறைகளைக் கைக்கொள்ளக் தொடங்கி விட்டாலும்ஆனையிறவுப் போரிலேயே தம்மையும் ஒரு மரபு வழிப் படை அணியென முழுமையாகக் காட்டிக் கொண்டார்கள், இதன் காரணமாக தென் ஆசியாவில் புதியதொரு மரபு வழிப் படையணி உருவாகிவிட்டது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது-

தென்னாசியாவில் ஏழு நாடுகள் - இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், சிறிலங்கா, மாலைதீவு, பூட்டான்-இருப்பினும், முதல் ஐந்து நாடுகளுமே பலமான இராணுவ அமைப்புக்களைக் கொண்ட நாடுகளாகும். பூட்டான் முழுமையாக இந்தியாவின் பாதுகாப்பில் உள்ளது. மாலைதீவிலும் பலமான ஒரு இராணுவ அமைப்பு இல்லை. மாலைதீவில் 1987இல் நூற்றுக் கணக்கானோர் செய்த சதிப் புரட்சியை முறியடிக்க இந்திய இராணுவத்தின் உதவியே பெற வேண்டிய நிலையில் மாலைதீவு அரசாங்கம் இருந்தது.

இந்நிலையில் நோக்கும் போது ஏழு நாடுகள் சுதந்திர அரசுகளாக இருந்தாலும் சுதந்திரத்திற்காகப் போராடும் தமிழீழம் கொண்டுள்ள மரபு வழிப் படையணி தென்னாசியாவில் ஆறாவது இடத்தில் உள்ளது. அதேவேளை இந்தியா, பாகிஸ்தான் என்பனவனவற்றிற்கு அடுத்ததாக சிறிலங்காவினதும் தமிழீழத்தினதும் படைகளே தீவிர செயற்பாடு கொண்ட படை அணிகளாகவுள்ளன.

**விடுதலைப் புலிகள் மரபு வழி படைஅணியாக மாறி வருகின்றமை தென்னாசியாவில் வலுச் சமநிலையைப் பாதிக்க வல்லதாகும். ஏழு சுதந்திர நாடுகளைக் கொண்ட தென்னாசியாவில் சுதந்திரப் போராட்டம் நடத்தும் தமிழீழப் படையணி குறிப்பிடக் கூடிய பலமான படையணியாகும்.**

## மதிநுட்பம் மிக்க தளபதி

மேலும் தென் ஆசியாவின் ஆறாவது பெரும்படைஅணிக்குத் தலைமை தாங்கும் விடுதலைப்புலிகளின் தளபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் இன்று உலகில் பிரபலம் மிக்க ஒரு தளபதியாவார். இவர் இன்று நவீன ஆயுதங்களைப் போர் முனையில் பயன்படுத்துவதில் வெற்றிகொண்டுள்ளதோடு, நவீன போர் முறையில் தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு என்பவற்றைத் திறம்படப் பயன்படுத்துவதிலும் வெற்றி கொண்டுள்ளார். இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் போர் யுக்திகள் இன்று எதிரிகளாலும் பாராட்டப்படும் அளவில் வளர்ந்துள்ளது.

## இராணுவச் சமநிலையில் மாற்றம்

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் படை அணிகளும் அவற்றின் செயற்பாடுகளும் தென்னாசியப் பிராந்திய இராணுவச் சமநிலையில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவருகின்றது. நேபாளம், பூட்டான் மாலைதீவு அரசாங்கங்கள் தென்னாசிய அரசியலில் வகிக்கும் பங்கைவிட தமிழீழ படையணி தென்னாசிய அரசியலில் பெறும் முக்கியத்துவம் திட்டவட்டமாக உயர்வானது எனத் துணிந்து கூறலாம்.


இந்நிலையில் ஆனையிறவுப் பெரும் போர் தென்னாசிய அரசியலிலும், இராணுவ கூட்டு ஒத்துழைப்புகளிலும் பெரும் மாற்றங்களையும் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கலாம். இதற்கான அடிப்படை முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கலாம் எனவும் அரசியல் அவதானிகளின் கருத்துக்களில் இருந்து புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

## உறவில் நெருக்கம்

இதன் வெளிப்பாடாகவே அண்மைக்காலத்தில் இந்திய சிறிலங்கா உறவு விட்டுக் கொடுப்புக்களுடன் மிக விரைவில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய இராணுவத்தின் வருகையால் சீரழிந்த சிறிலங்கா பொருளாதாரஉறவுகள் தற்பொழுது சீர் செய்யப்பட்டுள்ளன. இந்திய-சிறிலங்கா பொருளாதார ஆணைக்குழு தொடர்பான உடன்படிக்கை மூன்று தினங்கள் முன் கைச்சாத்தானது

அதேவேளை இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட டில்லி சென்ற சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இவ்வுடன்படிக்கை தொடர்பாக பேச்சுக்கள் நடத்தியதை விட இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் அகதிகள் விவகாரங்கள்பற்றியுமேநீண்ட நேரம் பேச்சு நடத்தியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பேச்சு வார்த்தையின் போது இந்தியாவிடம் இருந்து இராணுவத்தளபாட உதவி



களை அமைச்சர் ஹோரத் கோரியிருக்கக் கூடும் எனவும் அரசியல்விமர்சகர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## ஆயுதக் கொள்வனவில் சில சிக்கல்

சிறிலங்கா இதுவரையிலும் மேற்கு நாடுகளிடம் இருந்தும் பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிடம்இருந்துமே பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது. பின்னர் வளைகுடாவில் குறிப்பாக ஈராக்கில் இருந்தும் பெருமளவு ஆயுதக் கொள்வனவு செய்வதற்குத்தீர்மானித்திருந்தது.

ஆனால் தற்பொழுது மேற்குலக நாடுகள் மனித உரிமைகள்விவகாரத்திலும் மூன்றாம் உலக நாடுகளுக்குஆயுதம் விற்பனை செய்வதிலும் சற்றுக் கடினப்போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளன. அத்தோடு பிரிட்டிஷ் தூதுவர் கிளாஸ்ரோன் விவகாரமும் சிறிலங்காவிற்கான ஆயுதவிநியோகத்தில் தடங்கலை ஏற்படுத்தியுள்ளது

மேலும் இவ்வருட ஆரம்பத்தில் நடைபெற்ற வளைகுடாப் போரினால் ஈராக்கிடம் இருந்து திட்டமிட்டவாறு ஆயுதம் கொள்வனவு செய்யமுடியாது போனது.

அதேவேளை சீனா, பாகிஸ்தான் என்பனவற்றிடம் இருந்து போதிய ஆயுதங்களை சிறிலங்கா கொள்வனவு செய்யக்கூடிய வாய்ப்புக்கள்உண்டு. ஆனால் போதிய அந்நிய செலவாணி கையிருப்பு இன்மையும், ஆயுத உற்பத்தி விற்பனை, கொள்வனவு விவகாரத்தில் பாகிஸ்தான், சீனா என்பனவற்றிற்கும் அமெரிக்காவிற்குமிடையிலுள்ள முரண்பாடுகள் சற்று வலுவடைந்துள்ளன. உலகில் புதிய அரசியல் ஒழுங்கொன்றை உருவாக்க முற்பட்டுள்ள அமெரிக்காவிற்கு இன்று மூன்றாம் உலகின் முன்னணி ஆயுத விநியோகத்தராக இருக்கும் சீனாவின் போக்கும், அமெரிக்கா பொருளாதார உதவிகளை நிறுத்திய போதும் அணுக்குண்டைத் தயாரித்தே தீருவது என்ற பாகிஸ்தானின் பிடிவாதமும் சற்று எரிச்சலை ஊட்டியுள்ளது. இந்நிலையில் இவ்விரு நாடுகளிடம் இருந்தும் தொடர்ச்சியாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது என்பது சிறிலங்காவிற்குச் சற்றுச் சங்கடங்களை ஏற்படுத்தியுள்ளது.

## இராணுவக் கூட்டாளியின் அவசியம்

இதேவேளை, விடுதலைப் புலிகள் பெரும் சக்தியாக உருவாகியுள்ளமையால் தனியாக ஆயுத உதவி மட்டும் சிறிலங்காவிற்குக் கிடைத்தால் போதாது. உளரீதியாக ஆதரவும், ஆயுத உதவியும் வழங்கக்கூடிய ஓர் இராணுவக் கூட்டாளியே தேவையாக உள்ளது. அதாவது தளபாட உதவியும் அடக்குமுறைக்கு ஆதரவான இராணுவக் கூட்டாளியும்தேவையாகஉள்ளது.

இந்நிலையில் தென்னாசியாவில் ஓர் கூட்டாளியாக இந்தியாவை உருவாக்கிக் கொள்வதே சிறிலங்காவிற்கு இலகுவானதும் இடைஞ்சல் அற்றதாகவும் உள்ளது.

இந்தியா இன்று பொருளாதாரநெருக்கடியில்சிக்கி சீரழிந்தாலும் தென்னாசியாவில் இன்னும் பலம் பொருந்திய நாடாகவே உள்ளது தென்னாசியாவில் இந்தியாவை மீறி ஒரு இராணுவக் கூட்டாளியை சிறிலங்கா தேடிக் கொள்வது இலகுவான காரியமல்ல. சிறிலங்கா வெளியாரிடமும், தனது எதிரணியிடமுமிருந்து ஆயுதம் வாங்குவதை இந்தியா கண்டும் காணாமலும் இருந்து வந்ததுபோன்று சிறிலங்கா தென்னாசியாவில் இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளுடனே அன்றி தென்னாசியாவிற்கு வெளியிலோ இராணுவக் கூட்டை ஏற்படுத்துவதை இந்தியா அனுமதிக்கப் போவதில்லை. தனது பாதுகாப்பு என்ற ரீதியில்இந்தியாஎதிர்த்தே ஆகும். மேலும் தற்போதைய சர்வதேச புதிய அரசியல் ஒழுங்கில் இராணுவக் கூட்டுகள் நிகழ்வதை வல்லரசுகளும் குறிப்பாக மேற்கும் பெரிதாக வரவேற்கப் போவதில்லை.

## இந்தியாவின் மீது வளரும் நம்பிக்கை

மேலும் இந்தியாவில் தற்போது இலங்கைத் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. புலிகளை அழிப்பதிலும் தமிழரை வெளியேற்றுவதிலும் இந்தியா அக்கறையாக உள்ளது. அத்தோடு இந்தியாவில் தேசிய இனப் போராட்டங்களும் தீவிரப்பட்டுவருகின்றன. இதற்கு தமிழீழப் போராட்டம் முன்மாதிரியாக அமைந்துவிடுமென இந்தியா அஞ்சுகிறது. இச்சூழ்நிலையில் தமிழருக்கு எதிரான ஒரு இராணுவக் கூட்டமைப்பை இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் சிறிலங்காவிற்கு வாய்ப்பாக உள்ளது.

மேலும் அமெரிக்க, இந்திய உறவில் ஏற்பட்டுவரும் மாற்றமும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை இந்தியா ஏற்றமையும் அமெரிக்காவை ஓரளவு திருப்திப்படுத்தக் கூடிய விடயங்களாகும். இதனால் அமெரிக்காவின் ஆசியும்கிடைக்கலாம்.

இந்நிலையில் இந்திய சிறிலங்கா இராணுவ ஒத்துழைப்பு ஏற்படமுடியாத ஒன்றல்ல. இதற்காகப் புதிய உடன்படிக்கை ஒன்றையோ அன்றி, ஒப்பந்தத்தையோ இரு நாடுகளும் செய்து கொள்ள வேண்டும் என்ற அவசியமும் இல்லை. 1987 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்திய - சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இதனை மேற்கொள்ளலாம். இலங்கையின் ஒருமைப்பாடு என்ற சரத்தை இதற்கு ஆதாரமாகப் பயன்படுத்தலாம்.ஆனால் மீண்டும் இந்திய இராணுவத்தை இலங்கை மண்ணில் நேரடியாக ஈடுபடுத்துவது பெருமளவில் சாத்தியப்பாடு அற்ற விடயமாக இருப்பினும் இராணுவ ரீதியான ஏனைய சகல உதவிகளையும், உளரீதியான ஆதரவையும் இந்தியா சிறிலங்காவிற்கு வழங்கலாம்.

- ஜெயா -

---

## அடைக்கலம்

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு பசி உந்தலில் தட்டுத் தடுமாறி தாயின் அருகில் வந்து தீன் வாங்கியது.

இப்போது எவ்விதக் கஷ்டமுமில்லாமல் அந்தச் சிறிய ஒட்டை வழியே தாய் தலையை விட்டு தீனூட்ட, குஞ்சு சாப்பிட்டு வளர்ந்து கொண்டிருந்தது. நாளும் பொழுதும் அதன் சிறகுகள் வளர்ச்சி அடைந்து அழகான தோற்றமெடுத்தன. ஓரிரு முறை அதைத் திறந்துவிட்டுப் பார்த்தோம்... 'பறக்குமா'

அதற்குச் சரியாக பறக்கத் தெரியவில்லை. சிறகடித்து மெள்ள உயரப் பறந்து கீழே விழும். திரும்பவும் கூட்டில் பிடித்து விடுவோம். அது நல்ல வளர்ச்சி அடையும் வரை!

அதை இப்போது குஞ்சு என்று சொல்லமுடியாது. அதனால் இப்போது பறக்க முடியும். 'திறந்து விடலாம்' எனத் தீர்மானித்த போது மகள் கவலைப்பட்டாள்.

''வேண்டாமப்பா! அதை வைச்சு வளர்ப்பம்!''

''அடைச்சுவைக்கக்கூடாது! பாவம்தானே...? திறந்து விட்டாலும் அது இஞ்ச நிண்டு வளருமம்மா' - மகளை ஆதரவாக அணைத்துக் கொண்டேன்.

கதவைத் திறந்து விட்டு அதையே பார்த்துக்கொண்டு நின்றோம்.

கூட்டிலிருந்தபடியே எங்களைத் திரும்பத் திரும்பப் பார்த்தது. சிறகைச் சிலிர்த்து உதறியது. மெள்ளத் தாவி, கூட்டின் வாசலில் இருந்தது. சட்டெனப் பறந்து மரக் கிளைக்குப் போனது. அலகினால் ஒவ்வோர் இறகுகளாகக் கோதி விட்டுச் சரிபார்த்தது. அங்கிருந்தபடியே எங்களைப் பார்த்து... ''கீ!கீ!'' ''நன்றி! நன்றி!''

''கீச்... கீச்...'' என்று சத்தம் வந்தது. திரும்பிப் பார்த்தால் இராமர்! பரபரவென பாதி மரம் இறங்கி வந்து வாலைத் தூக்கித் தூக்கி எங்களைப் பார்த்துக் கத்தியது!

கொண்டைக் குருவிக் குஞ்சை சுதந்திரமாகப் பறக்க விட்டதற்கு தன்னுடைய ''கீச் ... கீச் ....'' சத்தம் மூலம் எங்களுக்கு நன்றி தெரிவிப்பதுபோல் தோன்றியது!

மீண்டும் உற்சாகமாக சரசரவென்று மரத்தின் உச்சிக்குப் போய் திரும்பிப் பார்த்தது.

இதற்குள் கொண்டைக் குருவிகள் இரண்டும் எங்கிருந்தோ பறந்து வந்து குஞ்சின் பக்கத்திலிருந்தன. குதூகலத்தில் மகிழ்ந்து கத்தியவாறே குஞ்சுடன் சேர்ந்து வேறொரு மரத்துக்குப் பறந்தன...

ஒருவிதமான திருப்தியுணர்வும் ஆனந்த விம்மலும் என் நெஞ்சை நிறைக்க, பக்கத்தில் நின்ற மனைவியையும் மகளையும் திரும்பிப் பார்த்தேன். - என்னடா இது! உத்தியோகத்துக்காக நான் எந்தப் பரதேசமெல்லாம் போய் வந்தாலும் சிணுங்காத என் மனைவி கண்கள் கலங்கிக்கொண்டு நின்றாள். மகள் வைத்த கண் வாங்காது குருவிகளைப் பார்த்தவாறே கையசைத்துக் கொண்டிருந்தாள் --

''பை! பை!''

''கீ! கீ!''

முற்றும்

---

## விழுதுகள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பு முகாமிலிருந்து விடுதலையானதும் மீண்டும் தீவிரமாக உழைத்தான். ஆயிரக்கணக்கான போராளிகளை பயிற்றுவிப்பதற்காக அயராது உழைத்தான். 1987 ஆம் ஆண்டுக்கு முன்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### விழுதுகள்

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிரியின் பல நிலைகளைப் பந்தாடிய இவனது குரல் ''உள்ளே போய்ச் சேர்ந்திட்டன்'' என்ற செய்தியை மட்டுமே எமக்குச் சொன்னது. அதன் பின் அவனது குரல் ஒலிக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தமது தளபதிகளின் வாயிலிருந்து முன்னுக்குப் போ என்ற சொல்லைக் கேட்டறிய மாட்டார்கள். ''எனக்குப் பின்னால் கெதியா வா'' என்ற சொல்லைத் தான் கேட்டிருப்பார்கள். எதிரியைச் சந்திக்கும் முதல் வீரராக தளபதிகள் தான் இருப்பார்கள். அந்த மரபுக்கமைய ஆனையிறவு முகாம் தாக்குதல் முயற்சியில்வீரமரணமடைந்த எல்லோருக்கும் முன்னதாக -மீட்க முடியாத இடத்தில் இவனது புகழுடல் கிடந்தது;

தாக்குதலுக்கு செல்வதற்கு முன்னர் தனது நண்பர்களிடம் ''என்ர பொடி உருப்படியா கிடைக்குதோ தெரியாது மச்சான்! சிலவேளை அப்பிடி கிடைக்கக் கூடியதா இருந்தா இந்த யூனிபோமைப் போடுங்கோ'' என்று ஒரு சீருடையையும் தனது புகழுடலுக்கு போர்த்துவதற்கு புலிக்கொடியையும் கொடுத்து விட்டுச் சென்றான். மரணத்தைப் பற்றிக் கலங்காத விடுதலைப் புலிகளின் வரலாற்றில் இச்சம்பவங்கள் எல்லாம் ஒவ்வொரு அத்தியாயங்களே.

இன்று எம்மிடையே இவன் இல்லைத்தான். இந்தத் தளபதியின் கம்பீரமான குரல் போராளிகளிடையே ஒலிக்காதுதான். ஆனால் ''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்றே நீ கூறு'' என்ற பாடலுள் இவனது குரலும் இணைந்து ஒலிக்கிறது. இவனோடு பழகியவர்களுக்கெல்லாம் இவனது குரலை அதற்குள் தனித்து இனம் காண முடிகிறது. கூட அதன் அர்த்தம் அவர்கள் நெஞ்சில் ஆழமாய்ப் பதிகிறது.

### தனியாரிடம்

ரக மற்றும் கவச வாகனங்கள் மணலில் புதைவதால் நடவடிக்கைகளுக்கு அவற்றைப் பயன்படுத்துவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனாலேயே ஒரு புதிய யுத்தியாக உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தத் தீர்மானித்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### நாளை முதல்

பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களும் பணிக்கப்பட்டுள்ளன.

இந்நிவாரணங்கள் முன்னர் வழங்கப்பட்ட இலக்கத்திற்கு அடுத்துள்ள இரு இலக்கங்களுக்கு வழங்குமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இந்நிவாரணம் அ, இ அட்டைகளுக்கு இலவசமாகவும் உ அட்டைக்கு பணத்திற்கும் வழங்கப்படவுள்ளன.

### யுத்த நிறுத்தம்

யறையற்ற யுத்தநிறுத்தத்தை அரசாங்கம் பிரகடனம்செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக தற்போது தொடுக்கப்பட்டுள்ள யுத்தத்தில் சிறிலங்கா அரசாங்கம் வெற்றியடையப் போகின்றது என்ற எதிர்பார்ப்பில் அந்த வெற்றியில் பங்கு கொள்ளும் நோக்கத்துடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற தெரிவுக்குழு நியமன விடயத்தில் பெரும் அக்கறை செலுத்துகின்றது என்றும்;

தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை ஆனால் இதய சுத்தியுடன் காலவரையறையற்ற யுத்தநிறுத்தம் ஒன்றை பிரகடனம் செய்த பின்னர் தெரிவுக்குழுவை நியமித்தால்எமது கட்சி அங்கம் வகிக்கும் என்றும் இது குறித்து தமது நிலைப்பாட்டை சபாநாயகருக்கு அனுப்பியுள்ளதாகவும் விக்கிரமபாகு கருணாரத்னா தெரிவித்தார்.

### ஆவணம்

ஆவணங்கள் இல்லாமல் இருப்போரும் நாடுகடத்தப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

2,10,000 இலங்கைத்தமிழர்கள் அகதிகளாக வந்துள்ளனர் என்றும், இவர்களில் 75,000 பேர் உரிய ஆவணங்களின்றி தமிழகத்தில் தங்கி இருப்பதாகவும் அரச மதிப்பீடு ஒன்று தெரிவிப்பதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் ஜேக்கப் தெரிவித்தார்.

### மாவீரருக்கு

அன்று வீரமரணமடைந்த பெண் போராளி ரூபியா (வினோதா வேலாயுதபிள்ளை குளவிசுட்டான், நெடுங்கேணி; என்பவரது புகழுடல் நெடுங்கேணி பிரதேசத்தில் மக்கள் அஞ்சலிக்காக நேற்றுமுன்தினம் காலை பத்து மணியளவில் முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்டது. இதில் ஐந்நூற்றுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர் இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் முல்லை மாவட்ட ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் பாஸ்கரன் மற்றும் முல்லை மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் சோனியா மற்றும் ஆசிரியர் சிவலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

இதன்பின் மாணவ மாணவிகள் மற்றும் மக்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று விடுதலைப் புலிகளின் பூரண இராணுவ மரியாதையுடன் முல்லைத்தீவு மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது.

### கேணல்

நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்ட நிலையில், இவர் கொழும்பு ஆஸ்பத்திரி மூளை நரம்புச் சிகிச்சைப் பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வடக்கில் பரீட்சைகள் பிற்போடப்பட்டன

(கொழும்பு)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளும், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சைகளும் ஒத்திப் போடப்பட்டுள்ளன என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நிலைமை சீரானவுடன் பரீட்சை நடத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்யும் படிமாகாணகல்விப்பணிப்பாளருக்கும், பரீட்சை சம்பந்தமான சகல அலுவலகங்களுக்கும் அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளதுஎன்றும் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதே வேளை க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான ஆவணங்கள் எப்போ யாழ்ப்பாணம் வருகிறதோ மறுதினமே முன்னர் வெளியிட்ட நேரசூசிக்கு அமைவாக பரீட்சை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். நடைபெறாதொழிந்த விடப்பட்ட பாடங்கள் இம்மாதம் 28ம் திகதிக்குப் பின்னர் தொடர்ந்து நடைபெறும் என பரீட்சை ஆணையாளரினால் இன்று அறிவிக்கப்பட்டுள்ளது என யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் பரீட்சையில்ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள்லீவுகள் யாவும் இரத்தாகின்றன பரீட்சார்த்திகள்யாவரும் வேறுஇடங்களுக்குச்செல்லாதிருக்குமாறும், தமது பாடங்களைக் கரிசினையாகக் கற்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தைத் தெரிவு செய்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் குறுகியகால அறிவித்தலில் யாழ். கல்வித்திணைக்களத்தில் வைத்து விநியோகிக்கப்படும். இடம்பெயர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பற்றிய முடிவை பரீட்சை ஆணையாளரே தீர்மானிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய பிரதேசத்திலிருந்து பெருமாள் இடமாற்றம்

(புதுடில்லி)


இந்தியாவில் தங்கியிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் பாதுகாப்பு காரணங்களுக்காக மத்தியப் பிரதேசம் சந்தேரி நகரில் இருந்து வேறொரு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்: வரதராஜப் பெருமாளுக்கு தீவிர பாதுகாப்புஅளிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள 'ரா' அமைப்பினர் இந்த ஏற்பாட்டை செய்துள்ளனர். அவர் எங்கு கொண்டுசெல்லப்பட்டார். என்பது பற்றி அதிகாரிகள் எந்தத் தகவலையும் தெரிவிக்க மறுத்துள்ளனர்.

### உணவு

ரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதில் ஒரு மோசடிகளின் போது 18 இலட்சம்ரூபாபெறுமதியான அரிசி 10 இலட்சம் ரூபாவிற்கு விற்கப்பட்டு 10 பேர் பங்கு போட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

## ஆகாய, கடல், வெளி போர்முனை



அத்தியாயங்களே.

இன்று எம்மிடையே இவன் இல்லைத்தான். இந்தத் தளபதியின் கம்பீரமான குரல் போராளிகளிடையே ஒலிக்காதுதான். ஆனால் ''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்றே நீ கூறு'' என்ற பாடலுள் இவனது குரலும் இணைந்து ஒலிக்கிறது. இவனோடு பழகியவர்களுக்கெல்லாம் இவனது குரலை அதற்குள் தனித்து இனம் காண முடிகிறது. கூட அதன் அர்த்தம் அவர்கள் நெஞ்சில் ஆழமாய்ப் பதிகிறது

வுக்குழு நியமன விடயத்தில் பெரும் அக்கறை செலுத்துகின்றது என்றும்;

தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுவதை நாம் எதிர்க்கவில்லை ஆனால் இதய சுத்தியுடன் காலவரையறையற்ற யுத்தநிறுத்தம் ஒன்றை பிரகடனம் செய்த பின்னர் தெரிவுக்குழுவை நியமித்தால்எமது கட்சி அங்கம் வகிக்கும் என்றும் இது குறித்து தமது நிலைப்பாட்டை சபாநாயகருக்கு அனுப்பியுள்ளதாகவும் விக்கிரமபாகு கருணாரத்னா தெரிவித்தார்.

யோர் உரையாற்றினர்.

இதன்பின் மாணவ மாணவிகள் மற்றும் மக்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று விடுதலைப் புலிகளின் பூரண இராணுவ மரியாதையுடன் முல்லைத்தீவு மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது.

## கேணல்

நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்ட நிலையில், இவர் கொழும்பு ஆஸ்பத்திரி மூளை நரம்புச் சிகிச்சைப் பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(புதுடில்லி)


இந்தியாவில் தங்கியிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் பாதுகாப்பு காரணங்களுக்காக மத்தியப் பிரதேசம் சந்தேரி நகரில் இருந்து வேறொரு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்: வரதராஜப் பெருமாளுக்கு தீவிர பாதுகாப்புஅளிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள 'ரா' அமைப்பினர் இந்த ஏற்பாட்டை செய்துள்ளனர். அவர் எங்கு கொண்டுசெல்லப்பட்டார். என்பது பற்றி அதிகாரிகள் எந்தத் தகவலையும் தெரிவிக்க மறுத்துள்ளனர்.

## உணவு

ரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதில் ஒரு மோசடிகளின் போது 18 இலட்சமரூபாபெறுமதியான அரிசி 10 இலட்சம் ரூபாவிற்கு விற்கப்பட்டு 10 பேர் பங்கு போட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

# ஆகாய, கடல், வெளி போர்முனை




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம்இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.